


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 2018

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# “நேரத்தை வீணாக்கும் பொழுது கடிகாரத்தை பார். ஓடுவது முள் அல்ல, உன் வாழ்க்கை.


Main Office @

**Weshine Study Circle**

New No 4 Old No 8B 1st Floor, Rangaswamy Street,,
Near Adyar Ananda Bhavan
Chrompet, Chennai - 600044

**Phone :** 8939 144 344, 8939 244 344

Branch Office @

**Weshine Study Circle,**

**Anna nagar**
Plot No: 47/60, “AK” Block, 7th Main Road
Anna Nagar (Next to Metro Water Pump),
Chennai, Tamil Nadu 600 040.

**Adyar**
3rd Floor,West Wing,Gokul Arcarde,
No.2,Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்




| | |
|---|---|
| 04 - 09 | தமிழக நிகழ்வுகள் |
| 10 - 40 | இந்திய நிகழ்வுகள் |
| 40 - 54 | உலக நிகழ்வுகள் |
| 54 - 63 | விருதுகள் |
| 63 - 71 | நியமனங்கள் |
| 72 - 79 | அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் |
| 79 - 88 | விளையாட்டு நிகழ்வுகள் |
| 89 - 92 | பொருளாதார நிகழ்வுகள் |
| 92 - 96 | முக்கிய தினங்கள் |
| 96 - 98 | புத்தகங்கள் |










# தமிழக நிகழ்வுகள்

1. தமிழ்நாட்டில் பணியிடங்களில் பெண் ஊழியர்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட குழு எது?

**விடை: விசாகா குழு**

**விளக்கம்:**

1. பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய விசாகா குழுவை அமைக்க வேண்டும் என்ற உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் படி 2013ம் ஆண்டு மத்திய அரசு சட்டம் இயற்றியது.
2. இதன்படி பத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பணியாற்றும் இடங்களில் இக்குழு அமைக்கப்பட வேண்டும். இந்நிலையில் அதிகமான பெண் காவலர்களை கொண்ட தமிழ்நாடு காவல்துறையில் தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக விசாகா குழு அண்மையில் அமைக்கப்பட்டது.
3. இக்குழுவின் **தலைவராக** காவல்துறையின் கூடுதல் தலைமை இயக்குநர் **சீமா அகர்வாலும்,** உறுப்பினர்களாக அருணாச்சலம், தேன்மொழி, எஸ்.பி.சரஸ்வதி ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

2. தேர்வு எழுதும் மாணவர்களின் பயத்தை போக்குவதற்காக பாரத பிரமரால் எழுதப்பட்ட புத்தகம் எது?

**விடை: Exam Warriors**

**விளக்கம்:**

1. இப்புத்தகத்தை தமிழில் **"தேர்வுப்போராளிகள்"** என்று மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டது. இதனை தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் வெளியிட தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

We Shine Academy TM

3. தமிழகத்தில் மேலும் எத்தனை அஞ்சல் நிலையங்களில் பாஸ்போர்ட் சேவை மையங்கள் அமைக்க அஞ்சல் துறை திட்டமிட்டுள்ளது?

**விடை: 5**

**விளக்கம்:**

1. தமிழகத்தில் தற்போது 12 அஞ்சல் நிலையங்களில் பாஸ்போர்ட் சேவை மையங்கள் செயல்பட்டு வருகிறது.
2. இந்நிலையில் சேவையை நீட்டிக்கும் வகையில் அரக்கோணம், வடசென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், ஆரணி ஆகிய 5 இடங்களில் பாஸ்போர்ட் சேவை மையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

4. தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக மத்திய அரசின் எத்தனை விருதுகள் தமிழக அரசுக்கு வழங்கப்பட்டது?

**விடை: 3**

**விளக்கம்:**

1. 2017-18 நிதி ஆண்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 58 லட்சம் பணியாளர்களுக்கு 23.89 கோடி மனித உழைப்பு நாள்களுக்கு ரூ.5344 கோடி ஊதியம் வழங்கியது உள்ளிட்டவற்றில் சிறந்த செயல்பாட்டிற்காக தேசிய அளவில் முதலிடத்திற்கான விருது வழங்கப்பட்டது.
2. மேலும், இதே திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 16,89,480 சொத்துகளில் 16,83,863 சொத்துகள் **(97.89%)** புவிக்குறியீடு செய்யப்பட்டு தேசிய அளவில் அதிகமாக புவிக்குறியீடு செய்த சாதனைக்காக, தேசியளவில் முதலிடத்திற்கான விருது வழங்கப்பட்டது.
3. இதே திட்டத்தில் 99.23% ஆதார் எண்களை வங்கிக் கணக்குகளுடன் இணைக்கப்பட்டு நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் ஆதாருடன் இணைத்து ஊதியம் செலுத்துதலில் சிறந்த செயல்பாட்டிற்காக தேசிய அளவில் இரண்டாம் இடத்திற்கான விருதும் வழங்கப்பட்டன.

4. இவை தவிர, மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலை உறுதித் திட்டத்தை மாவட்ட அளவில் சிறப்பான முறையில் செயல்படுத்தியதற்காக தமிழகத்தின் **தஞ்சாவூர் மற்றும் திருவண்ணாமலை** மாவட்டங்களுக்கு தேசிய விருதுகள் வழங்கப்பட்டன.

5. தமிழகத்தில் அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பிளாஸ்டிக் பயன்பாட்டுக்கு எப்போது முதல் தடை அறிவிக்கப்பட்டுள்ளது?

**விடை: செப்டம்பர் 15**

**விளக்கம்:**

1. இதன்படி பள்ளி வளாகத்தில் பிளாஸ்டிக் பயன்பாடு இல்லாத பள்ளி வளாகம் என்று பெயர்பலகை வைக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.
2. தமிழகத்தில் அடுத்த ஆண்டு **ஜனவரி 1** முதல் பிளாஸ்டிக் பொருள்களை பயன்படுத்த தடை விதிக்கப்படுவதாக தமிழக அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது.

6. தூய்மையே உண்மையான சேவை என்ற திட்டத்தை பாரத பிரதமர் செப்டம்பர் 15-ல் தமிழகத்தில் எங்கு தொடங்கி வைத்தார்?

**விடை: மணிவிழுந்தான் (வடக்கு ஊராட்சி, சேலம் மாவட்டம்)**

**விளக்கம்:**

1. கடந்த 2014ம் ஆண்டு மகாத்மா காந்தியின் பிறந்தநாளை அக்டோபர் 2ம் தேதி தூய்மை இந்தியா திட்டத்தை நரேந்திர மோடி அவர்கள் துவங்கி வைத்தார்.

7. கலைஞர்களின் வளர்ச்சிக்காக தமிழகம் எந்த நாட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது?

**விடை: பிரான்ஸ்**

**விளக்கம்:**

1. செப்டம்பர் 7 அன்று, தமிழக தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க. பாண்டியராஜன் மற்றும் பிரான்ஸ் நாடாளுமன்ற சர்வதேச நல்லுணர்வு

We Shine Academy

உறுப்பினர் ஓ.பிரிசாட் ஆகியோர் கையொப்பமிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டனர்.

8. தமிழகத்துக்கு எத்தனை விஸ்வகர்மா தேசிய விருதுகள் வழங்கப்பட்டன?

**விடை: 8**

**விளக்கம்:**

1. 2016ம் ஆண்டில் சிறந்த வகையிலான செயல்பாடுகளுக்காக **28 விஸ்வகர்மா தேசிய விருதுகள் 139 பேருக்கும், தேசிய பாதுகாப்பு விருதுகள் 128 பேருக்கும்** பகிர்ந்து அளிக்கப்பட்டன.
2. இதில் **பெல் நிறுவன ஊழியர்களுக்கு 7 விருதுகளும்**, சேலம் எ.்.கு **தொழிற்சாலை ஊழியர்களுக்கு 1** விருதுமாக மொத்தம் 8 விருதுகள் தமிழகத்துக்கு வழங்கப்பட்டன.

9. ஸ்வச் வித்யாலயா புரஸ்கர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள தமிழக மாவட்டம் எது?

**விடை: காரைக்கால்**

**விளக்கம்:**

1. பள்ளிகளில் கடைப்பிடிக்கப்படும் தூய்மைப்பணிக்காக இந்திய அளவில் வழங்கப்படும் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்களில் காரைக்கால் மாவட்டம் 3வது இடத்தைப் பெற்றது.
2. இதற்கான விருதை மத்திய மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் வழங்கினார். மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் சார்பில் நாடு முழுவதும் பள்ளிகளில் கையாளப்படும் தூய்மைப்பணி, மாணவர்கள் கைகழுவும் விதம், கழிப்பறை பராமரிப்பு ஆகியவற்றை ஆய்வு செய்து ஸ்வச் வித்யாலயா புரஸ்கார் விருது வழங்கப்படுகிறது.
3. மாவட்ட அளவில் புதுச்சேரிக்கு முதல் பரிசும், ஆந்திர மாநிலம் திருக்காகுலம் மாவட்டம் இரண்டாவது பரிசும், காரைக்கால் மாவட்டத்தில் அகழங்கண்ணு அரசு தொடக்கப்பள்ளி, கோட்டுச்சேரி பேட் அரசு

We Shine Academy

தொடக்கப்பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகள் தேர்வானதால் 3வது பரிசும் கிடைத்தது.

4. நாட்டிலேயே புதுச்சேரிக்கும், காரைக்காலுக்கும் பள்ளிகளில் தூய்மை பராமரிப்பதில் சிறப்பிடம் வழங்கப்பட்டுள்ளது.

10. தமிழகத்தில் உள்ள நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர் மீதான குற்றவழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: ஜே.சாந்தி**

1. இந்நீதிமன்றம் சென்னையில் உள்ள சிங்காரவேலர் மாளிகையில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதல் தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
2. இந்நீதிமன்றத்தை சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியான ஹுலுவாடி ஜி.ரமேஷ் செப்டம்பர் 20ல் தொடங்கி வைத்தார். இந்த சிறப்பு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக ஜே.சாந்தியை உயர்நீதிமன்றத்தின் தலைமை பதிவாளர் சி.குமரப்பன் நியமித்தார்.

11. தமிழகத்தின் மாநகராட்சியாக அறிவிக்கப்படவுள்ள நகராட்சி எது?

**விடை: நாகர்கோவில்**

**விளக்கம்:**

1. எல்லைகள் மறுசீரமைப்பு குழுவின் பணிநிறைவடைந்தவுடன் நாகர்கோவில் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தி அறிவிக்கப்படும் என தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
2. கன்னியாகுமரிக்கு ஆண்டுதோறும் வரும் **75** லட்சம் உள்ளூர், வெளியூர், வெளிநாட்டு சுற்றுப்பயணிகளில் **22** லட்சம் சுற்றுலாப்பயணிகள் மட்டுமே விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கு செல்கின்றனர். இதனை அதிகரிக்கும் வகையில் கன்னியாகுமரியிலிருந்து விவேகானந்தர் பாறைக்கு செல்ல ரோப்கார் வசதியும், விவேகானந்தர் பாறையிலிருந்து

We Shine Academy

திருவள்ளுவர் சிலைக்கு செல்ல கடல்வழி பாலம் ஒன்றும் அமைக்கப்படும் எனவும் தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

12. அண்மையில் தமிழகத்தில் எந்த மாநிலத்திற்கான நட்பு ரீதியான மாளிகை திறக்கப்பட்டுள்ளது?

**விடை: ஒடிசா**

**விளக்கம்:**

1. ஒடிசா மற்றும் தமிழகத்திற்கு இடையே ஓர் இணைப்பினை ஏற்படுத்தும் வகையில் 2012 மே 11ம் தேதி "ஒடிசா பவன்"-ஐ கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

13. நிகழாண்டுக்கான அர்ஜுனா விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட தமிழக வீரர் யார்?

**விடை: ஜி.சத்யன் (டேபிள் டென்னிஸ்)**

14. தமிழகத்தின் புதிய தலைமை செயலகம் கட்டப்பட்டதில் நடந்ததாக கூறப்படும் முறைகேடுகள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணையம் எது?

**விடை: ரகுபதி ஆணையம்**

**விளக்கம்:**

1. இது 2001ம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி, முன்னாள் துணைமுதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் முன்னாள் அமைச்சர் துரைமுருகன் ஆகியோருக்கு கடந்த 2015ம் ஆண்டு சம்மன் அனுப்பியது.

2. இந்நிலையில் ரகுபதி ஆணையத்தின் செயல்பாடுகளை நிறுத்திவைக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் நீதிபதி ரகுபதி அவர்கள் ஆணையத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்தார்.

# இந்திய நிகழ்வுகள்

1. ரக்செளல் - காத்மண்டு இடையேயான ரயில் பாதை அமைக்கும் திட்டம் தொடர்பாக எந்த இரு நாடுகள் ஒப்பந்தமிட்டுள்ளது?

**விடை: இந்தியா – நேபாளம்**

**விளக்கம்:**

1. இது தொடர்பாக, நோபாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலி மற்றும் இந்தியா பிரதமர் மோடி முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
2. இதனிடையே காத்மண்டில் நடைபெற்ற 2 நாள்கள் “பீம்ஸ்டெக்” மாநாட்டில் பிரமர் மோடி கலந்துக் கொண்டார்.

2. இந்தியாவில் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது?

**விடை: 10 ஆண்டுகள்**

**விளக்கம்:**

1. வரும் 2021ம் ஆண்டுக்கான மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் சுதந்திரத்திற்குப் பின் முதல் முறையாக இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மக்கள் தொகை தனியாகக் கணக்கெடுக்கப்பட உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
2. கடைசியாக இந்தியாவில் கடந்த 2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
3. **1931ம்** ஆண்டு நடந்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் **(OBC)** மக்கள்தொகை கடைசியாக தனியாகக் கணக்கெடுக்கப்பட்டது.
4. இந்த கணக்கெடுப்பை அடிப்படையாக வைத்து, கடந்த 1990ல் வி.பி.சிங் அரசு OBC-க்கு **27 சதவீதம்** இடஒதுக்கீடு வழங்கியது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy™

3. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கேரளத்தை மறுகட்டமைக்க எந்த நிறுவனத்தை ஆலோசகராக நியமிக்க அந்த மாநில அரசு முடிவு செய்துள்ளது?

**விடை: கேபிஎம்ஜி நிறுவனம்**

**விளக்கம்:**

1. உலகிலேயே மிகப்பெரிய சேவை நிறுவனமான கேபிஎம்ஜியை கேரள சீரமைப்புப் பணிகளுக்கு ஆலோசகராக நியமிக்கப்படும் என்றும், அந்நிறுவனம் தனது சேவைகளை இலவசமாக வழங்கும் எனவும் கேரள முதல்வர் பினராயி விஜயன் கூறினார்.

4. இந்தியா எந்த வங்கியுடன் இணைந்து மத்திய பிரதேசத்தில் பாசன வசதியை மேம்படுத்த ஒப்பந்தம் செய்துள்ளது?

**விடை: ஆசிய வளர்ச்சி வங்கி**

5. இந்தியாவும் ஆசியவளர்ச்சி வங்கியும் இணைந்து எந்த மாநிலத்தில் உள்ள நெடுஞ்சாலைகள் மேம்படுத்துவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளன?

**விடை: கர்நாடகா**

**விளக்கம்:**

1. கர்நாடகா மாநிலத்தில் உள்ள 400 கிலோமீட்டர் மாநில நெடுஞ்சாலையை மேம்படுத்தவும், 12 மாவட்டங்களில் பொருளாதார மையங்களை உருவாக்கவும், ஆசிய வளர்ச்சி வங்கி 346 மில்லியன் டாலர் கடன் வழங்க உள்ளது.

6. இந்திய ரயில்வே எப்போது முதல் பயணிகளுக்கான இலவச பயணகாப்பீடு வழங்க போவதில்லை என அறிவித்துள்ளது?

**விடை: செப்டம்பர் 1**

**விளக்கம்:**

1. **Indian Railways Catering and Tourism Corporation (IRCTC)** என்ற நிறுவனம் செப்டம்பர் 1 முதல் இலவச பயணகாப்பீட்டை

We Shine Academy™

நிறுத்துவதாகவும், இனி இது விருப்பத்தின் போரில் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

2. பயணாளர்கள் இணையதளத்திலே அல்லது செல்லிடப்பேசி செயலி மூலமாகவே பயணச்சீட்டை பதிவுசெய்யும் போது **opt-in or opt-out** என்ற இரண்டில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்ய வேண்டும்.

7. 15வது நிதிக்குழுவின் தலைவர் யார்?

**விடை: நந்த் கிஷோர் சிங்**

**விளக்கம்:**

1. ஒவ்வொரு மாநில வாரியாக வேளாண்மை வளர்ச்சிப் பணிகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்களை நிதிக்குழு ஆராய உள்ளது.
2. இந்தக் குழுவின் பரிந்துரைகள் வரும் 2020ம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வருகின்றன.
3. வரும் செப்டம்பர் 5 அன்று இந்தக் குழு தமிழகம் வருவது குறிப்பிடத்தக்கது.
4. இந்தக் குழுவின் முழுநேர உறுப்பினராக தமிழகப் பிரிவு ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற சக்திகாந்த் தாஸ் இடம்பெற்றுள்ளார்.

8. இந்தியாவில் முதல்முறையாக எந்த நிறுவனம் உயிரி எரிபொருளைப் பயன்படுத்தி விமானத்தை வெற்றிகரமாக இயக்கியுள்ளது?

**விடை: ஸ்பைஸ்ஜெட் (Spice Jet)**

**விளக்கம்:**

1. வழக்கமான விமனா எரிபொருளுடன் **25%** உயிரி எரிபொருள் நிரப்பப்பட்ட இந்த விமானம், டேராடூனில் இருந்து தில்லிக்கு சுமார் **40** நிமிடங்களில் சென்றடைந்தது.
2. இந்தியாவில் **“தேசிய உயிரி எரிபொருள் கொள்கை”** கடந்த 2009ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

9. கிராமங்களை மகிழ்ச்சி நிறைந்ததாகவும், உயிர் தொழில்நுட்ப வசதிகள் கொண்டதாகவும் மாற்ற உருவாக்கப்பட்ட திட்டம் எது?

**விடை: ஸ்மார்ட் கிராமம்**

**விளக்கம்:**

1. பிரணாப் முகர்ஜி, குடியரசுத் தலைவராக இருந்தபோது, **ஹரியானாவிலுள்ள தாஜ்நகர், தௌலா, அலிப்பூர், ஹர்சந்த்பூர், ரோஜ்காமியோ** ஆகிய 5 கிராமங்களில், ஸ்மார்ட் கிராமம் திட்டத்தை கடந்த 2016ம் ஆண்டு ஜூலை 2ம் தேதி தொடங்கி வைத்தார்.
2. தற்போது இந்தத் திட்டம் 100 கிராமங்களில் விரிவுப்படுத்தப்பட உள்ளது.

10. இந்தியாவில் நேரடி அன்னிய முதலீடு செய்துள்ள நாடுகளின் வரிசையில், முதலிடம் பிடித்த நாடு எது?

**விடை: மொரிஷியஸ்**

**விளக்கம்:**

1. இந்தப் பட்டியலில் 2வதாக உள்ள நாடு சிங்கப்பூர்
2. ஒட்டுமொத்தமாக, இந்தியாவில் கடந்த 2017-18ம் நிதியாண்டில் **ரூ.2.65** லட்சம் கோடி (**37.36 பில்லியன் டாலர்**) முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
3. தலைநகரம் : போர்ட் லூயிஸ்
4. அதிபர் : அமீனா குரிப்
5. பிரதமர் : பிரவீந்த் ஜீக்நாத்
6. நாணயம் : மொரிஷிய ரூபாய்

11. எந்த ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதிப்பெயர் அவசியம் என மத்திய அரசு அறிவித்துள்ளது?

**விடை: 2021**

**விளக்கம்:**

1. இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1872ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. அப்போதிலிருந்து தற்போது வரை

சாதிப்பிரிவுகளின் கீழ் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

2. இதன் அடிப்படையிலேயே சாதிப்பிரிவினருக்கு இடஒதுக்கீடும் வழங்கப்பட்டு வருகிறது.
3. இதுவரை ஒபிசி, எஸ்சி, எஸ்டி என்ற சாதிப்பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இனி ஒவ்வொரு வரும் உள்சாதிப்பிரிவை குறிப்பிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

12. எந்த மாநிலத்தில் உள்ள ரயில் நிலையத்திற்கு கிருஷ்ணர் பெயர் சூட்டப்படுகிறது?

**விடை: ஜார்க்கண்ட்**

**விளக்கம்:**

1. ஜார்க்கண்ட் மாநிலத்தின் கர்வா மாவட்டத்தில் உள்ள ரயில் நிலையத்திற்கு கிருஷ்ணர் பெயர் சூட்டப்படுவதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.
2. ஆளுநர் : திரௌபதி முர்மு
3. முதலமைச்சர் : ரகுபர் தாஸ்
4. உயர்நீதிமன்ற தலைமையிடம் : ராஞ்சி

We Shine Academy™

13. எந்த மாநிலத்தில் உள்ள மின் விநியோக துறையின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக உலக வங்கி 250 மில்லியன் டாலர் கடன் வழங்கியுள்ளது?

**விடை: ராஜஸ்தான்**

**விளக்கம்:**

1. 24 × 7 அனைவருக்கும் மின்சாரம் வழங்கும் சட்டத்தின் கீழ், இந்திய அரசாங்கம், ராஜஸ்தான் அரசாங்கம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றிற்கு இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

2. ஆளுநர் : கல்யான்சிங்

3. முதலமைச்சர் : வசுந்தர ராஜே

**4. உயர்நீதி மன்ற தலைமையிடம் : ஜோத்பூர்**

**(1949 ஜூன் 21-ல் உருவாக்கப்பட்டது)**

14. அலுவலக மொழியாக ஹிந்தி மொழியை உட்புகுத்துவதில் உள்ளசிக்கல்களுக்குத் தீர்வு காண யார் தலைமையில் உத்தியோகபூர்வ மொழி திணைக்களத்தின் கூட்டம் (Meeting of the Department of Official Language) நடைபெற்றது?

**விடை: ராஜ்நாத் சிங் (மத்திய உள்துறை அமைச்சர்)**

**விளக்கம்:**

1. மேலும், அனைத்து வகையான அலுவலக கோப்புகளையும் ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கு மொழிமாற்றம் செய்ய **"Kanthasth"** என்ற செயலி உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இவர் தெரிவித்தார்.

15. ஆதரவற்ற கைம்பெண்களுக்கு உதவிடும் நோக்கில் 1000 பேர் தங்கும் அளவிற்கு உருவாக்கப்பட்ட வீட்டின் பெயர் என்ன?

**விடை: Krishna Kutir**

**விளக்கம்:**

1. இதனை, மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் ஸ்ரீமதி மேனகா சஞ்சய் காந்தி மற்றும் உத்திரப் பிரதேச முதல்வர் ஸ்ரீ ஆதித்யநாத் யோகி ஆகியோர் துவங்கி வைத்தனர்.
2. இந்த Krishna Kutir ஆனது **மதுராவிலுள்ள விருந்தாவனில் (மத்திய பிரதேசம்)** அமைக்கப்பட்டுள்ளது.

We Shine Academy ™

16. நாட்டு மக்கள் அனைவருக்கும் வங்கி கணக்கு தொடங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட "ஜன் தன்" திட்டத்தை மத்திய அரசு எப்போது அறிமுகப்படுத்தியது?

**விடை: 2014 ஆகஸ்டு**

**விளக்கம்:**

1. 4 ஆண்டுகள் வரை இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த திட்டத்தின் கீழ் எப்போது வேண்டுமானாலும் மக்கள் வங்கி கணக்கை தொடங்கலாம் என மத்திய அமைச்சரவை கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.
2. இதில் கணக்கில் இருப்பதை விட கூடுதலாக **5,000** வரை எடுக்கலாம் என்ற சலுகையிருந்தது. இப்போது அத்தொகை **ரூ.10,000** மாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

We Shine Academy™

17. பள்ளிகளில் சேர ஆதார் கட்டாயமில்லை என அறிவித்துள்ள அமைப்பு எது?

**விடை: இந்திய தனித்துவ அடையாள ஆணையம்**

**விளக்கம்:**

1. சில பள்ளிகள் ஆதார் இல்லாததை காரணம் காட்டி மாணவர்கள் சேர்த்துக் கொள்ள மறுக்கப்படுவதாக தகவல் கிடைத்ததையொட்டி இவ்வாறு அறிவித்துள்ளது.
2. இனி ஆதார் இல்லாததை சுட்டிக்காட்டி மாணவர் சேர்க்கை மறுத்தால் அது சட்டத்திற்கு எதிரான குற்றமாக கருதப்படும் எனவும் அறிவித்துள்ளது.
3. இந்திய தனித்துவ அடையாள ஆணையம் **ஜனவரி 28, 2009ல்** அப்போதைய பிரதமர் மன்மோகன்சிங்கால் தொடங்கப்பட்டது. இதன் தற்போதைய தலைவராக **அஜய்பூஷண் பாண்டே** உள்ளார்.

18. மத்திய அரசின் 15வது நிதிக்குழு யாருடைய தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது?

**விடை: M.K. சிங்**

**விளக்கம்:**

1. இக்குழுவில் அனூப் சிங், அசோக் லகிரி, ரமேஷ் சந்த், மற்றும் அரவிந்த் மேத்தா ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.
2. இவர்களுடைய பரிந்துரை **2020 ஏப்ரல் 1 முதல் 2025 மார்ச் 31** வரை நடைமுறைப்படுத்தப்படும்.

19. இந்தியா எந்த நாட்டிடமிருந்து 18 புல்லட் ரயில்களை வாங்குகிறது?

**விடை: ஜப்பான்**

**விளக்கம்:**

1. இந்தியாவில் போக்குவரத்தை மேம்படுத்த ரூ.7 ஆயிரம் கோடி செலவில் இது வாங்கப்பட உள்ளது.
2. இது 10 பெட்டிகள் கொண்டதாகவும் மணிக்கு 350 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடியதாகவும் இருக்கும்
3. இந்தியாவின் முதல் புல்லட் ரயில் சேவை மும்பையிலிருந்து அகமாதாபாத் வரை **2022ம் ஆண்டு இறுதிக்குள்** செயல்படுத்தப்பட உள்ளது.

We Shine Academy

20. உயர்பதவியில் இருப்போருக்கு எதிரான ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்காக லோக்பால் அமைப்பு சட்டம் எப்போது இயற்றப்பட்டது?

**விடை: 2013**

**விளக்கம்:**

1. லோக்பால் அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை லோக்பால் தேர்வுக்குழு, தேர்வு செய்யும். அந்த தேர்வுக்குழுவானது பிரதமர், மக்களவை தலைவர், எதிர்க்கட்சி தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் அவரால் பரிந்துரைக்கப்படும் மற்றொரு நீதிபதி ஆகியோரைக் கொண்ட 5 நபர்களை உள்ளடக்கிய அமைப்பு ஆகும்.

21. சர்வதேச போக்குவரத்து மாநாட்டை பாரத பிரதமர் எங்கு தொடங்கி வைத்தார்?

**விடை: டெல்லி**

**விளக்கம்:**

1. நிதி ஆயோக் அமைப்பு ஒருங்கிணைத்த இந்த மாநாடு, மின்சாரம் மூலமாக இயங்கும் வாகனங்கள், பொதுப்போக்குவரத்து ஆகியவற்றை ஊக்குவிப்பதை மையமாக கொண்டு நடைபெற்றது.
2. இந்தியாவில் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை உற்பத்தி செய்வதை விரைவுபடுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டம் **(ஃபேம் இந்தியா-2)** குறித்து ஆலோசிக்கப்பட்டது.

22. எந்த மத்திய அமைச்சகத்தால் மகாத்மா காந்தி சர்வதேச துப்புரவு மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

**விடை: குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம்**

**விளக்கம்:**

1. மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தின் தொடக்கத்தை குறிக்கும் வகையில் மகாத்மா காந்தி சர்வதேச துப்புரவு மாநாட்டை செப்டம்பர் 29 முதல் புதுடெல்லியில் நடத்த மத்திய குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

23. அண்மையில் குற்றமற்றதாக அறிவிக்கப்பட்ட பிரிவு 377 எந்த ஆண்டில் நடைமுறைக்கு வந்தது?

**விடை: 1861**

**விளக்கம்:**

1. ஓரினச்சேர்க்கை குற்றமில்லை என்று உச்சநீதிமன்றம் செப்டம்பர் 6 அன்று தீர்ப்பளித்தது. இதை குற்றமாக அறிவிக்கும் இந்திய தண்டனையியல் சட்டத்தின் 377வது பிரிவின் ஒரு பகுதியை செல்லாது எனவும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான ஐவர் அடங்கிய அரசியல் சாசன அமர்வு இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.

We Shine Academy TM

24. வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பத்தினருக்கு இலவச அலைபேசிகளை வழங்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?

**விடை: ராஜஸ்தான்**

**விளக்கம்:**

1. பிரதமர் மோடியின் டிஜிட்டர் இந்தியா திட்டத்தின் கீழ் ராஜஸ்தான் அரசு **பாமஷா என்ற** திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இதன்படி வறுமைகோட்டுக்கு கீழ் உள்ள குடும்பத்தினருக்கு இலவச அலைபேசிகளை வழங்க முடிவு செய்துள்ளது.
2. மேலும் 5,000 கிராமப் பஞ்சாயத்துகளுக்கு Wi-Fi வழங்கப்பட உள்ளது.

25. ஊட்டச்சத்துக் குறைபாடுகளுக்கு எதிரான போராட்டத்தை குறிக்கும் வகையில் நாடு முழுவதும் தேசிய ஊட்டச்சத்து மாதமாக (National Nutrition Month) எந்த மாதத்தை கடைப்பிடிக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது?

**விடை: செப்டம்பர்**

**விளக்கம்:**

1. இம்மாதத்தில் குழந்தைகளிடையே நிலவும் ரத்தசோகை மற்றும் குறைவான பிறப்பு எடை போன்ற ஊட்டச்த்துக் குறைபாடு தொடர்பான விவகாரங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் அமைச்சகம் பல்வேறு திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது.
2. 2022ம் ஆண்டுக்குள் 0-6 வயதுடைய குழந்தைகளிடையே நிலவும் வளர்ச்சிக் குறைபாட்டை 38 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக குறைப்பதை நோக்கமாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் இந்த மாதம் கடைப்பிடிக்கப்படும்.

We Shine Academy ™

26. மறைந்த மத்திய உள்துறை அமைச்சர் வல்லபாய் படேலின் உருவச் சிலையை பிரதமர் நரேந்திர மோடி எப்போது திறந்து வைக்க உள்ளார்?

**விடை: அக்டோபர் 31**

**விளக்கம்:**

1. சர்தார் அவர்களின் பிறந்த நாளன்றே அவரது சிலை திறக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.
2. குஜராத்தில் 182 மீட்டர் உயரத்தில் சர்தாரின் சிலை கட்டப்பட்டுள்ளது.

27. மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் சிலையை அமைக்க எந்த நாடு முடிவு செய்துள்ளது?

**விடை: ஸ்விட்சர்லாந்து**

**விளக்கம்:**

1. ஸ்விட்சர்லாந்தின் பெர்ன் நகரில் இவரது சிலை அமைக்கப்பட உள்ளது.
2. ஹிந்தி திரையுலகில் கொடிகட்டி பறந்த தயாரிப்பாளரும், இயக்குநருமான யஷ் சோப்ராவுக்கு முதன் முதலாக ஸ்விட்சர்லாந்து அரசு சிலை அமைத்து கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy™

28. தியாகிகளின் குடும்பங்களுக்கென ஒரு வேலைவாய்ப்பு முகாமை நடத்த முடிவு செய்துள்ள மாநில அரசு எது?

**விடை: ராஜஸ்தான்**

**விளக்கம்:**

1. தியாகிகள் குடும்பத்தை சேர்ந்த குறைந்தபட்சம் ஒருவருக்காவது அரசாங்க வேலை வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் ராஜஸ்தான் அரசு அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் சிறப்பு வேலைவாய்பு முகாம்களை நடத்த முடிவு செய்துள்ளது.

29. குழந்தைகளுக்கு ஏற்படும் கேன்சர் நோய்க்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக மத்திய அரசு அறிவித்துள்ள திட்டம் எது?

**விடை: பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா**

**விளக்கம்:**

1. இந்த திட்டத்தை நிதிஆயோக் உறுப்பினரான வினோத்குமார் பால் பரிந்துரைத்தார்.
2. இத்திட்டத்தின் கீழ் ஏழைக்குடும்பத்தை சார்ந்தோருக்கு 5 லட்சம் காப்பீடு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

30. நாட்டிலேயே முதல் முறையாக வீட்டிற்கே சென்று அரசு சேவைகள் வழங்கும் திட்டம் எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் தொடங்கப்பட்டது?

**விடை: டெல்லி**

**விளக்கம்:**

1. காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை அரசு சேவையை பெறுவதற்கு **1076 என்ற எண்ணை** அழைத்து விவரங்களை தெரிவிக்க வேண்டும். பின்னர் பயனாளர் தெரிவிக்கும் நேரத்துக்கு சம்பந்தப்பட்ட முகவரிக்கு உதவியாளர் வருவார்.
2. அதன்பின் தேவையான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு தேவையான சேவை கிடைப்பதை உறுதி செய்வார். இச்சேவையை பெறுவதற்கு ரூ.50 கட்டணமாக வசூலிக்கப்படும் இதற்கான ரசீதும் செல்லிடப்பேசிக்கு அனுப்பி வைக்கப்படும்.
3. ஒவ்வொரு உதவியாளர் நகர்வையும் நிறுவனம் ஜி.பி.எஸ். வாயிலாக கண்காணிக்கும். முதற்கட்டமாக சாதிசான்றிதழ், வருமானசான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ் உள்ளிட்ட 40 சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
4. இது படிப்படியாக அதிகரிக்கப்பட்டு நவம்பர் மாதத்திற்குள் 100 சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

31. தேசிய சுகாதார நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் யார்?

**விடை: டாக்டர் இந்து பூஷண்**

We Shine Academy TM

**விளக்கம்:**

1. இதேபோல், தமிழக சுகாதாரத் துறை முதன்மைச் செயலா் ஜெ.ராதாகிருஷ்ணன்
2. இவா்கள் இருவரும் **செப்டம்பா் 11** அன்று, பிரதமரின் மருத்துவக் காப்பீட்டு திட்டத்துடன் தமிழக அரசின் காப்பீட்டுத் திட்டத்தை இணைக்க புரிந்துணா்வு ஒப்பந்தம் செய்துள்ளனா்.
3. பிரதமரின் 'ஜன் ஆரோக்யா யோஜனா' மற்றும் **'ஆயுஸ்மான் பாரத்'** திட்டத்துடன் **தமிழக முதல்வரின் வரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்** இணைக்கப்பட உள்ளது.

32. எந்தெந்த தோ்தல்களின் வாக்குச்சீட்டுகளில் இருந்து நோட்டா நீக்கப்பட வேண்டும்?

**விடை: மாநிலங்களவை & சட்டமேலவை தோ்தல்கள்**

**விளக்கம்:**

1. ஆனால், மக்களவை, மாநில சட்டப் பேரவைகளுக்கான தோ்தல்களில் நோட்டா தொடா்ந்து அமலில் இருக்கும்.

33. டெல்லி அரசு எந்த நகருடன் நகா்ப்புற மேம்பாட்டிற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

**விடை: சியோல் (தென்கொரியா தலைநகா்)**

**விளக்கம்:**

1. டெல்லி முதல்வா் அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் டெல்லியின் நகா்புற மேம்பாட்டு துறை அமைச்சா் சத்யேந்திர ஜெயின் அவா்களுக்கும் சியோல் நகரத்திற்கும் இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

34. இந்தோ – பூடான் எல்லை மையம் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?

**விடை: டாா்ரங்கா**

**விளக்கம்:**

1. அசாம் மாநிலத்தில் உள்ள பக்ச மாவட்டத்தில் உள்ள டார்ரங்கா என்னுமிடத்தில் அம்மாநில முதல்வர் சர்பானந்த சோனோவால் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
2. 264 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த எல்லைப்பகுதியில் சாலைகள் அமைப்பதன் மூலம் இருநாடுகளுக்கிடையேயான வார்த்தகத்தை மேம்படுத்த முடியும் என்று கூறினார்.

35. மத்திய அமைச்சரவை அண்மையில் எந்த திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது?

**விடை: Pradhan Mantri Annandada Aay SanrakshHan Abhiyan**

**விளக்கம்:**

1. விவசாயிகளின் விலைபொருளுக்கு உரிய விலை கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படும் என்று இந்த ஆண்டு பட்ஜெட்டில் அறிவித்திருந்தது. இதன்படி இத்திட்டம் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.
2. இது 2022ம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கவும் உதவும். மத்திய அரசு ஏற்கனவே காரீப் பயிர்களுக்கான அடிப்படை விலையை 1.5 மடங்கு உயர்த்தி அறிவித்திருந்தது.

36. தேசிய வடிவமைப்பு நிறுவன சட்டம் (National Institute of Design) எப்போது இயற்றப்பட்டது?

**விடை: 2014**

**விளக்கம்:**

1. இந்த சட்டத்தில் பாராளுமன்றத்தில் அண்மையில் திருத்தம் செய்யப்பட்டது. அதன்படி தேசிய வடிவமைப்பு நிறுவனம் அமராவதி (ஆந்திரபிரதேசம்), போபால் (மத்திய பிரதேசம்), ஜார்கட் (அசாம்), குருஷேத்ரா (ஹரியானா) ஆகிய இடங்களில் புதிதாக தொடங்கப்பட உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

We Shine Academy ™

37. ஐ.நா.வின் மனித வளர்ச்சி குறியீட்டில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**விடை: 130 (Human development Index)**

**விளக்கம்:**

1. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 189 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவில் இந்தியாவிற்கு 130வது இடம் வழங்கப்பட்டுள்ளது.
2. வங்கதேசம் 136வது இடத்தையும், பாகிஸ்தான் 150வது இடத்தையும் பெற்றுள்ளது.

38. சிக்கிம் மாநிலத்தில் முதல் விமான நிலையம் எங்கு தொடங்கப்பட உள்ளது?

**விடை: பாக்யாங் நகர்**

**விளக்கம்:**

1. சிக்கிம் மாநிலத்தை விமான போக்குவரத்துடன் இணைக்கும் நோக்கில் சிக்கிம் தலைநகரான காங்டாக்கிலிருந்து 30 கிலோ தொலைவில் அமைந்துள்ள பாக்யாங் நகரில் அம்மாநிலத்தின் முதல் விமான நிலையத்தை பாரத பிரதமர் செப்டம்பர் 23ல் துவங்கி வைக்கிறார்.

We Shine Academy TM

39. பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டத்தின் கீழ் 2017-18 ஆண்டில் சிறப்பாக செயல்பட்டதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநிலம் எது?

**விடை: உத்தரகாண்ட்**

**விளக்கம்:**

1. பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டம் என்பது கிராமப்புறங்களில் சாலை அமைக்கும் ஒரு திட்டமாகும்.

40. எந்த பிரிவின் கீழ் ஒடிசா சட்டசபையானது மாநிலத்தில் சட்ட மேலவையை அமைக்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது?

**விடை: சட்டப்பிரிவு 169**

**விளக்கம்:**

1. இத்தீர்மானத்தின் படி முன்மொழியப்பட்ட இந்த மேலவையானது நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையை போல் செயல்படும். இது 49 உறுப்பினர்களை கொண்டது.
2. ஈராண்டுக்கு ஒருமுறை சட்டமேலவையின் மூன்றில் ஒரு உறுப்பினர் ஓய்வு பெறுவார். சட்டமேலவையை உருவாக்க இயற்றப்பட்ட இத்தீர்மானம் நாடாளுமன்ற ஒப்புதலுக்கு பின் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.
3. ஒரு மாநிலத்தின் சட்டமேலவையை உருவாக்க அல்லது நீக்க அரசியலமைப்பு பிரிவு 169ன் கீழ் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானத்தை சம்பந்தப்பட்ட மாநில சட்டபேரவை நிறைவேற்ற வேண்டும்.
4. இந்தியாவில் உள்ள மாநிலங்களில் ஆந்திர பிரதேசம், தெலுங்கானா, பீகார், கர்நாடகா, ஜம்மு-காஷ்மீர், உத்திரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய 7 மாநிலங்களில் மட்டுமே சட்டமேலவை உள்ளது.
5. **தமிழகத்தில் சட்டமேலவை 1986 நவம்பர் 1ல்** கலைக்கப்பட்டது.

41. ஜெய்ப்பூர் இலக்கிய விழா, (Jaipur Literature Festival) எங்கு துவங்கப்பட்டது?

**விடை: ஹீஸ்டன் (Houston)**

1. 2006 முதல் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வரும் இந்த விழா, ஜெய்ப்பூருக்கு வெளியே நடைபெறுவது இதுவே முதல் முறையாகும்.
2. மேலும், உலகின் மிகப் பெரிய இலவச இலக்கிய விழாவாக இந்த விழா நடைபெறுகிறது.

3. இந்த விழாவின் துவக்கத்தில் காங்கிரஸ் தலைவரும், எழுத்தாளருமான சசி தரூர் தனது **"Why i am a Hindu"** என்ற புத்தகத்தை, எழுத்தாளர் நமிதா கோகலே உடன் இணைந்து விவரித்தார்

42. நாட்டின் முதல் பிரத்தியேகமான நாய் பூங்கா (Dog Park) எங்கு அமைக்கப்பட்டுள்ளது?

**விடை: ஹைதராபாத்**

**விளக்கம்:**

1. இந்தப் பூங்காவில் நாய்களுக்கு பயிற்சி மற்றும் உடற்பயிற்சி அளிக்க தேவையான உபகரணங்களும் உள்ளன.
2. இது 1.3 ஏக்கர் பரப்பில், ரூ.1.1 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

43. 20வது மத்திய வேலைவாய்ப்பு உத்திரவாத கவுன்சிலின் (CEGC – Central Employment Guarantee Council) கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் யார்?

**விடை: நரேந்திர சிங் டோமர்**

**விளக்கம்:**

1. போபாலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் **MNREGA** திட்டத்தின் பயன்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டது.
2. MNREGA என்பது 260 வகை வேலைகளை உள்ளடக்கிய 5.5 முதல் 6 கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் இந்தியாவின் மிகப்பெரிய வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டமாகும்.
3. **MNREGA – Mahatma National Rural Employment Guarantee Act scheme**

44. இந்தியா – மொராக்கோ இடையிலான சுற்றுலா மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை: புதுடெல்லி**

**விளக்கம்:**

1. இதில், இந்திய சுற்றுலாத்துறை அமைச்சர் K.J. அல்போன்ஸ் மற்றும் மொராக்கோ சுற்றுலாத்துறை அமைச்சர் மொஹமத் சாஜித் ஆகியோர் பங்கேற்றனர்.
2. இதில் இந்தியாவின் India Tousism Development Corporation மற்றும் மொராக்கோவின் La Societe Marocaine D'Ingenierie Touristique (SMIT) இடையே இருநாடுகளிலும் சுற்றுலாத் தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது.

45. ITM 2018 (India Tourism Mart 2018) – யை முதன் முதலாக இந்தியாவில் துவங்கி வைத்தவர் யார்?

**விடை: பியூல் கோயல்**

**விளக்கம்:**

1. செப்டம்பர் 16லிருந்து 18 வரை நடைபெற உள்ள இந்த கூட்டத்தை மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.
2. இந்திய சுற்றுலாத்துறை அமைச்சர் K.J. அல்போன்ஸ் மற்றும் மொராக்கோ சுற்றுலாத்துறை அமைச்சர் மொஹமத் சாஜித் ஆகியோர் முன்னிலையில், புது டெல்லியில் first ever ITM 2018-யை துவங்கி வைத்த பியூஸ் கோயல், அடுத்த 5 ஆண்டிற்குள் US $ 100 பில்லியனை **FTA receipts (Foreign Transfer Allowance receipts)** பெற வாழ்த்து தெரிவித்தார்.

46. எந்த ஐரோப்பிய யூனியன் நாட்டுடன், இந்தியா 3 முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது?

**விடை: மால்டா**

We Shine Academy TM

**விளக்கம்:**

1. கடல்சார் பாதுகாப்பு, வெளிநாட்டு சேவை நிறுவனங்கள் மேம்பாடு, சுற்றுலா வளர்ச்சி ஆகியவை தொடர்பான 3 ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.
2. கடந்த செப்டம்பர் 16 அன்று இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு, மால்டா-விற்குச் சென்றார்.
3. இந்தியாவின் முக்கியத் தலைவர் ஒருவர் மால்டாவிற்குச் செல்வது கடந்த 28 ஆண்டுகளில் இதுவே முதன் முறையாகும்.
4. மால்டா அதிபர் - மேரி லூயிஸ் கொலெய்ரோ ப்ரேகா

47. இந்தியாவின் முதல் பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரி யார்?

**விடை: அண்ணா ராஜம் மல்ஹோத்ரா**

**விளக்கம்:**

1. சென்னையைச் சேர்ந்த இவர், 1951ம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணியில் இணைந்தார். இவர் மும்பையில் உள்ள ஜவஹர்லால் நேரு துறைமுகத்தை கட்டமைப்பதில் முக்கிய பங்காற்றினார்.
2. இவருக்கு 1989ம் ஆண்டு பத்மபூஷண் விருது அளிக்கப்பட்டது. இவரது கணவரான **ஆர்.என். மல்கோத்ரா ரிசர்வ் வங்கியின்** ஆளுநராக 1985 முதல் 1990 வரை பணியாற்றினார்.

48. எத்தனால் ஆலைக்காக இந்தியன் ஆயில் நிறுவனத்துடன் அண்மையில் ஒப்பந்தம் செய்து கொண்ட மாநிலம் எது?

**விடை: ஹரியானா**

**விளக்கம்:**

1. பானிபட்டில் ஒரு எத்தனால் தொழிற்சாலையை அமைப்பதற்காக இந்திய ஆயில் நிறுவனத்துடன் ஹரியானா அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 100 கிலோ லிட்டர் எத்தனால் தயாரிக்கப்படும்.

We Shine Academy TM

49. MILEX-18 என்ற முதலாவது BIMSTEC இராணுவப்பயிற்சியை நடத்திய நகரம் எது?

**விடை: புனே**

**விளக்கம்:**

1. இது BIMSTEC நாடுகளுக்கிடையே நடைபெற்ற முதலாவது இராணுவப்பயிற்சி ஆகும். பயங்கரவாத சவால்களை கையாளுவதில் ஒத்துழைப்பை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டு இந்தப்பயிற்சி நடைபெற்றது.
2. நேபாளம் தவிர்த்து BIMSTEC-ன் அனைத்து உறுப்புநாடுகளின் படைவீரர்களும் இப்பயிற்சியில் பங்கேற்றனர்.

50. இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்தியாவின் எந்த நகரங்களுக்கு ஆதரவளிக்க Mobilise Your City – MYC என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன?

**விடை: நாக்பூர், கொச்சி மற்றும் அகமதாபாத்**

**விளக்கம்:**

1. நாக்பூர், கொச்சி மற்றும் அகமதாபாத் ஆகிய 3 முன்னோடி நகரங்கள் தங்களின் பைங்குடில் வாயு உமிழ்வைக் குறைப்பதற்காகவும், தேசிய அளவிலான இந்தியாவின் நிலையான போக்குவரத்து கொள்கையை மேம்படுத்துவதற்காகவும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

51. முத்தலாக் முறையை தடைசெய்யும் அவசர சட்டத்துக்கு மத்திய அமைச்சரவை எப்போது ஒப்புதல் அளித்தது?

**விடை: செப்டம்பர் 19**

**விளக்கம்:**

1. இதனை மீறி முத்தலாக் முறையில் மனைவியை விவகாரத்து செய்யும் நபருக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்க முடியும். நேரில் முத்தலாக் கூறுவது மட்டுமின்றி இ-மெயில், கடிதம், எஸ்எம்எஸ்

We Shine Academy ™

உள்ளிட்டவை மூலம் முத்தலாக் கூறுவதும் தண்டனைக்குறிய குற்றமாகும்.

2. இச்சட்டத்தில் கடந்த மாதம் ஜாமீன்பெறும் பிரிவும் சேர்க்கப்பட்டது.

52. சர்வதேச அளவிலான மாநாடுகள், கண்காட்சிகள் உள்ளிட்டவற்றை நடத்தும் வகையிலான அரங்கம் கட்டுவதற்கு பாரத பிரதமரால் எங்கு அடிக்கல் நாட்டப்பட்டது?

**விடை: டெல்லி**

**விளக்கம்:**

1. டெல்லியில் துவாரகா பகுதியில் 221.37 ஏக்கர் நிலத்தில் 2019 டிசம்பர் மாதம் 2024 டிசம்பர் மாதம் என இரு தவணைகளாக இந்த திட்டத்தை நிறைவேற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
2. ஐஜசிசி அரங்கம் என்று பெயரிடப்பட்ட இந்த அரங்கம் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான நிகழ்ச்சிகள், ஆலோசனைக்கூட்டங்கள், கண்காட்சிகள், வர்த்தக மாநாடு ஆகியவற்றை நடத்தும் அரங்கமாக இது திகழும்.
3. நாட்டிலேயே மிகப்பெரிய உள்நாட்டு அரங்கமாகவும், உலகிலேயே மிகப்பெரிய 10வது அரங்கமாகவும் ஐஜசிசி அரங்கம் உருவாக்கப்பட உள்ளது.

53. எந்த ஆற்றின் மீது **போகிபீல்** என்ற இந்தியாவின் மிகநீண்ட சாலை-ரயில் பாலம் அமையவுள்ளது?

**விடை: பிரம்மபுத்திரா**

**விளக்கம்:**

1. கிலோமீட்டர் நீளமுடைய அசாம் மற்றும் அருணாச்சல பிரதேசம் இடையே சாலை மற்றும் ரயில் இணைப்புகளை வழங்கும் இப்பாலம் ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய பாலமாகும்.
2. பிரம்மபுத்திரா ஆற்றின் மேல் அமையவுள்ள இரண்டாவது மிகநீண்ட பாலமாகும். பிரம்மபுத்திரா ஆற்றின் மேலே 32 மீட்டர் உயரத்தில்

We Shine Academy

அமைக்கப்படும் இது மேலே 3-வழி சாலையையும், கீழே இருவழி ரயில் பாதையும் கொண்டதாக அமையவுள்ளது.

54. 12வது ஏரோ இந்தியா-2019 நடைபெற உள்ள நகரம் எது?

**விடை: பெங்களூரு**

**விளக்கம்:**

1. **ஏரோ இந்தியா – 2019** என்ற விமானகண்காட்சியை **பெங்களூருவில் 2019** பிப்ரவரி 20-24 வரை நடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
2. இந்த ஐந்து நாள் நிகழ்ச்சியில் வான்துறை சார்ந்த பெரிய வர்த்தக கண்காட்சியை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.
3. உள்நாட்டு விமான தொழிலுக்கு மிகுந்த ஊக்கத்தை அளிப்பதுடன் இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்துக்கும் இது பெரிதும் உதவும்.

55. சிறந்த நிர்வாகம் குறித்த 2 நாள் பிராந்திய மாநாட்டை நடத்திய நகரம் எது?

**விடை: போபால்**

**விளக்கம்:**

1. மத்திய அரசின் நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொது மக்கள் குறைதீர்ப்பு துறை மத்திய பிரதேச மாநில அரசுடன் இணைந்து ஆர்வமிக்க மாவட்டங்களில் சிறந்த நிர்வாகம் என்ற தலைப்பில் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.
2. இந்த மாநாட்டில் 12 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்கள் பங்கேற்கின்றனர். தகவல் தொடர்பு தொழில்நுட்பம் சார்ந்த கல்வி, வேலைவாய்ப்பு, பொதுசேவைகள் மற்றும் குறைதீர்ப்பு மேலாண்மை மற்றும் சிறந்த நிர்வாக முயற்சிகள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

56. ஐ.நா. சபையின் கட்டிட மேற்கூரையில் சூரிய மின்தகடுகள் அமைக்க 7 கோடியை 20 லட்ச ரூபாய் நிதி வழங்கியுள்ள நாடு எது?

**விடை: இந்தியா**

We Shine Academy TM

**விளக்கம்:**

1. கார்பன் வெளியீட்டை குறைப்பதற்காக ஐ.நா.-வின் சூரிய மின்திட்டத்திற்கு இந்தியா நிதியுதவி அளித்துள்ளது. இந்த தொகையால் ஐ.நா. தலைமையக கட்டிடத்தின் மேற்கூரைக்கு சூரிய மின்தகடுகள் பொருத்தப்படவுள்ளது.

57. கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தொடங்கப்பட்ட திட்டம் எது?

**விடை: ஆஷா**

**விளக்கம்:**

1. 2005ம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் 10ம் வகுப்பை நிறைவு செய்யாத ஊரக பகுதிகளை சேர்ந்த 45 வயதுக்குட்பட்ட பெண்கள் சுகாதார ஆர்வலராக இணையலாம்.
2. பேறு காலங்களிலும், பிரசவ நேரங்களிலும் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை மேற்கொள்வது குறித்தும் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவது குறித்து கிராமப்புற மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் அவர்களவு முக்கிய பணிகள் ஆகும்.
3. இதற்காக மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை இரண்டாயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

58. பன்னாட்டு தமிழ்ப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பிடித்தவர் யார்?

**விடை: நரேன் கௌதம் நாகராஜன் (இந்தியா)**

**விளக்கம்:**

1. மியான்மர் தலைநகர் யாங்கூனில் பன்னாட்டுத் தமிழ்ப் பேச்சுப் போட்டி நடைபெற்றது.
2. இதில் இந்தியா, இலங்கை, மலேசியா, மியான்மர் மொரிஷியஸ், ஆஸ்திரேலியா நாடுகளைச் சேர்ந்த 20 மாணவர்கள் கலந்துக் கொண்டனர்.

3. இதில் இந்தியாவின் நரேன் கௌதம் நாகராஜன் முதலிடத்தையும், மலேசியாவின் தேவேந்திரன் சுகுமார் இரண்டாம் இடத்தையும் வென்றனர்.

59. தேசிய சுகாதார பாதுகாப்புத் திட்டமான ‘ஆயுஷ்மான் பாரத்’ திட்டத்தை இன்று செப்டம்பர் 23 மோடி எங்கு துவங்கி வைக்கிறார்?

**விடை: ஜார்கண்ட்**

**விளக்கம்:**

1. நாடு முழுவதும் உள்ள 10 கோடி ஏழைக் குடும்பங்கள், ஆண்டுக்கு தலா ரூ. 5லட்சம் வரை இலவச மருத்துவக் காப்பீடு பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
2. தலைநகரம் : ராஞ்சி
3. முதலமைச்சர் : ரகுபார் தாஸ்
4. ஆளுநர் : திரௌதி முர்மு
5. உயர்நீதிமன்றம் : ஜார்கண்ட் (2000-ல் நிறுவப்பட்டுள்ளது)

60. இந்தியாவின் எந்த இடத்தில் ஐ.நா.ஹவுஸ் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது?

**விடை: டெல்லி**

**விளக்கம்:**

1. வரும் அக்டோபர் 1 அன்று, இந்தியாவிற்கு வருகை புரிய உள்ள ஐ.நா. பொதுச் செயலர் அண்டோனியோ குட்டெரெஸ், இந்த ஐ.நா. ஹவுஸ்-யை டெல்லியில் திறந்து வைக்க உள்ளார்.
2. அக்டோபர் 2 அன்று மகாத்மா காந்தி சர்வதேச சுகாதாரத் திட்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவிருக்கும் இவர், அக்டோபர் 3 அன்று டெல்லியிலுள்ள ஹேபிடேட் சென்டரில் **‘சர்வதேச சவால்கள், சர்வதேச தீர்வுகள்’** என்ற தலைப்பில் சர்வதேச அளவிலான விவகாரங்கள் குறித்து அவர் உரையாற்ற உள்ளார்.

We Shine Academy ™

3. இந்தப் பயணம், அண்டோனியோ குட்டெரெஸ் ஐ.நா. பொதுச் செயலராக அவர் பதவியேற்ற பிறகு இந்தியாவிற்கு வருகை தரும் அவரின் முதல் பயணமாகும்.

61. எந்த நகரத்தில் இந்தியாவின் முதல் ரயில்வே பல்கலைக்கழகமான தேசிய ரயில் மற்றும் போக்குவரத்து நிறுவனம் அமைந்துள்ளது?

**விடை: வதோதரா**

**விளக்கம்:**

1. இது போக்குவரத்து தொடர்பான கல்வி, பல்சார் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தும் இந்தியாவின் முதல் பல்கலைக்கழகம் ஆகும்.
2. இது தேசிய இந்திய ரயில்வேயின் அகாடெமி வளாகத்தினுள் 57 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

We Shine Academy™

62. அமெரிக்காவைச் சேர்ந்த 'குரோனாஸ் கூட்டிணைவு' நிறுவனத்தின் ஆய்வின்படி உலகின் மிகவும் கடினமாக உழைக்கும் நாடு எது?

**விடை: இந்தியா**

**விளக்கம்:**

1. இந்நிறுவனத்தின் ஆய்வின்படி உலகின் மிகவும் கடினமாக உழைக்கும் நாடுகளில் வாரத்தில் ஐந்து நாள் பணிபுரிந்து மகிழ்ச்சியுடன் 69 சதவீத முழுநேர ஊழியர்களுடன் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
2. மெக்ஸிகோ 43 சதவீதம் பணியாளர்களுடன் இரண்டாமிடத்திலும், அமெரிக்கா 27 சதவீதம் பணியாளர்களுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளது.

63. எந்த மாநிலத்தில் இந்தியாவின் முதல் பழங்குடி சுற்றுலாத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது?

**விடை: சத்தீஸ்கர்**

**விளக்கம்:**

1. சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள கேங்ரலில், சுதேசி தர்சன் திட்டத்தின் கீழ் இந்தியாவின் முதல் பழங்குடி சுற்றுலாத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
2. பழங்குடி சுற்றுலாத்திட்டத்தின் கீழ் நாகாலாந்து, தெலுங்கானா மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களுக்கு, 4 திட்டங்களுக்கு மத்திய சுற்றுலா அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.

64. இந்திய சமையல் நிறுவனத்தை (Indian Culinary Institute) துணை ஜனாதிபதி ஸ்ரீ M.வெங்கய்யா நாயுடு எங்கு துவங்கி வைத்தார்?

**விடை: திருப்பதி (ஆந்திர பிரதேசம்)**

**விளக்கம்:**

1. மேலும் நெல்லூர் மற்றும் கிழக்கு கோதாவரி மாவட்டங்களில் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் **Swadesh Darshan Scheme** – ன் கீழ் இரண்டு திட்டங்களை துவங்கி வைத்தார்.

65. 4வது இந்திய சர்வதேச அறிவியல் விழாவை (IISF – 2018) குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் எங்கு துவங்கி வைக்க உள்ளார்?

**விடை: லக்னோ (உத்திரப் பிரதேசம்)**

**விளக்கம்:**

1. அக்டோபர் 6 அன்று துவங்க உள்ள இந்த விழாவின் மையக்கருத்து **'Science for Transformation'** என்பதாகும்.
2. இந்த முறை **Science Village**-ம் விழாவில் ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

66. இந்தியாவில் 5G சேவை மற்றும் இணைய தொழில்நுட்பத்தை மேம்படுத்த ஜப்பானின் Softbank மற்றும் NTT Communications அமைப்புகளுடன் ஒப்பந்தம் செய்துள்ள இந்திய நிறுவனம் எது?

**விடை: BSNL (Bharat Sanchar Nigam Limited)**

We Shine Academy ™

**விளக்கம்:**

1. மேலும் **5G** தொழில்நுட்பத்தை மேம்படுத்த **Nokia** மற்றும் **Cisco** நிறுவனங்களுடன் **BSNL** ஒப்பந்தமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

67. சீன எல்லை அருகே சிக்கிம் மாநிலத்தின் பாக்யோங்-ல் கட்டப்பட்டுள்ள விமான நிலையத்தின் பெயர் என்ன?

**விடை: கிரீன்பீல்ட் விமான நிலையம்**

**விளக்கம்:**

1. அவசர காலங்களில் போர் விமானங்களை தரையிறக்கும் வகையில் கட்டமைக்கப்பட்ட இந்த விமான நிலையம் நமது நாட்டின் **100வது விமான நிலையம்** ஆகும்.
2. இதனை பிரதமர் மோடி **செப்டம்பர் 24** அன்று துவங்கி வைத்தார்.

68. இந்திய கடலோரக் காவல்படையானது அண்மையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட எந்த ரோந்துக்கப்பலை நாட்டுக்கு அர்ப்பணித்துள்ளது?

**விடை: விஜயா**

**விளக்கம்:**

1. கடலில் எண்ணெய் கசிவு ஏற்பட்டால் அதை நீக்கும் கருவிகளைக் கொண்டு செல்லும் வசதி விஜயா கப்பலில் உள்ளது.
2. தீவிரவாத ஊடுருவலை கட்டுப்படுத்துதல், போர் தொடர்பான பிற நடவடிக்கைகளுக்காக இந்த கப்பலில் 30 மில்லி மீட்டர், 12 மில்லி மீட்டர் என அதிநவீன துப்பாக்கிகள் இடம் பெற்றுள்ளது.
3. ஒடிசா மாநிலம் பாரதீப் துறைமுகத்திலிருந்து இந்தக் கப்பல் ரோந்து மற்றும் மீட்பு பணிகளில் ஈடுபடும்.

69. நாடு முழுவதும் உள்ள சிறைகளில், ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட 3 பேர் கொண்ட சிறப்பு குழுவின் தலைவர் யார்?

**விடை: அமிதவா ராய்**

We Shine Academy™

**விளக்கம்:**

1. இந்தியாவில் உள்ள 1382 சிறைசாலைகளில் உள்ள பிரச்சனைகளை கண்டறிந்து அவற்றை களைவதற்காக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

70. இந்தியா மற்றும் பங்களாதேஷ் இடையிலான வர்த்தக அமைச்சர்கள் மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை: டாக்கா**

**விளக்கம்:**

1. இந்திய வர்த்தகம், தொழில்துறை மற்றும் உள்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சர்கள் **சுரேஷ் பிரபுவும், பங்களாதேஷின் வர்த்தக அமைச்சரான டோ.ஃ.பெயில் அகமதும் (Tofail Ahmed)** இதில் கலந்துக் கொண்டனர்.
2. இதில் இரு நாட்டு உறவுகளையும் மேம்படுத்துவது தொடர்பான கருத்துக்கள் ஆலோசிக்கப்பட்டன.

71. Smart City Expo India 2018-யை துவங்கி வைத்தவர் யார்?

**விடை: ஸ்ரீ ஆ.வெங்கய்யா நாயுடு (இந்திய துணைக்குடியரசுத் தலைவர்)**

1. ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் 3 நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தை இவர் துவங்கி வைத்தார்.
2. இதில் ஸ்மார்ட் நகரங்களை உருவாக்குவது தொடர்பான திட்டங்கள், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் சவால்கள் தொடர்பான கருத்துக்கள் ஆலோசிக்கப்பட்டன.

72. சர்வதேச சூரிய கூட்டணியின் (**ISA – International Solar Alliance**) முதல் மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை: இந்தியா**

**விளக்கம்:**

1. இதனை புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் ஏற்பாடு செய்தது.

2. இதேபோல், **IORA (Indian Ocean Rim Association)-**வின் 2வது கூட்டம் மற்றும் **REINVEST – 2018 (Global Renewable Energy Investment Meeting and Expo 2018)-**ன் 2வது கூட்டம் ஆகியவை புது டெல்லியில் **அக்டோபர் 2 முதல் 5 வரை** நடைபெற உள்ளது.

73. **"India – Uzbekistan : Dialogue of Cultures"** கண்காட்சி எங்கு துவங்கி வைக்கப்பட்டது?

**விடை: புது டெல்லி**

**விளக்கம்:**

1. மத்திய கலாச்சார அமைச்சகத்தின் செயலாளர் ஸ்ரீ.அருண் கோயல் இக்கண்காட்சியை டெல்லியிலுள்ள தேசிய அருங்காட்சியகத்தில் **(National Museum)** துவங்கி வைத்தார்.

74. எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை தாண்டி பயங்கரவாதிகளின் முகாம்களில் இந்திய ராணுவத்தினர் துல்லிய தாக்குதலில் நடத்தியதன் எத்தனையாம் ஆண்டு நினைவு தினம் இன்று **(செப்டம்பர் 28)** அனுசரிக்கப்பட்டது?

**விடை: 2**

**விளக்கம்:**

1. இதையொட்டி ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் ராணுவ கண்காட்சியை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

75. சுற்றுலா அமைச்சகமானது இந்த ஆண்டு சுற்றுலா திருவிழாவை எந்த நகரத்தில் நடத்தியது?

**விடை: புது டெல்லி**

**விளக்கம்:**

1. சுற்றுலா துறையை வலுப்படுத்துவது, நாட்டின் கலாச்சார பன்முக தன்மையை வெளிப்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத்திருவிழா நடத்தப்பட்டது.

We Shine Academy TM

76. 20 வது கால்நடைகள் கணக்கெடுப்பு எப்போது தொடங்கவுள்ளது?

**விடை: அக்டோபர் 1**

**விளக்கம்:**

1. இந்தியாவில் உள்ள 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இக்கருத்துக்கணிப்பு அக்டோபர் 1 முதல் தொடங்கி நடைபெற உள்ளது.
2. இக்கருத்துக்கணிப்பில் ஆடு, குதிரை, கழுதை, நாய், முயல், யானை போன்ற விலங்குகளும் கோழி, ஈமு, காடை போன்ற பறவைகளும் கணக்கெடுக்கப்பட உள்ளன.

77. நாடு முழுவதும் உள்ள குழந்தைகள் மற்றும் பெண்களின் ஆரோக்கியத்தை 3 ஆண்டுகளில் எத்தனை சதவீதம் மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

**விடை: 9**

**விளக்கம்:**

1. குழந்தைகள் இடையே எடைகுறைபாடு, குள்ளத்தன்மை, நலிவுத்தன்மை மற்றும் பெண்களிடையே இரத்தசோகை குறைபாடுகளை கண்டறிந்து எதிர்காலத்தில் இந்த 4 பிரிவுகளில் பாதிப்புகளை தவிர்க்க வேண்டும் என மத்திய பெண்கள் மட்டும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

78. மகாத்மா காந்தி சர்வதேச சுகாதார மாநாட்டை இந்திய குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் எங்கு துவங்கி வைத்தார்?

**விடை: புதுடெல்லி**

**விளக்கம்:**

1. இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட 2014ம் ஆண்டில் சுகாதாரம் 39 சதவீதத்தை எட்டியிருந்தது தற்போது அது 95 சதவீதத்தை எட்டியிருக்கிறது. அடுத்த ஆண்டு அக்டோபர் 2ம் தேதிக்குள் திறந்த

வெளி மலம் கழிக்காதவர்களை கொண்ட நாடாக மாற்ற மத்திய அரசு முயற்சி எடுத்துவருகிறது.

2. காந்தியடிகளின் 150வது பிறந்த தினத்திற்கு நாடு அளிக்கும் சிறந்த பரிசாக இது இருக்கும் என்று இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கூறினார்.
3. மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தினம் மற்றும் தூய்மை இந்தியா திட்டம் தொடங்கி 4 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் வகையில் மத்திய குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சகம் சுகாதார மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தது. இந்த மாநாட்டில் 68 நாடுகளை சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

We Shine Academy™

# உலக நிகழ்வுகள்

1. 6-வது RCEP அமைச்சர்களின் மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை: சிங்கப்பூர்**

**விளக்கம்:**

1. இம்மாநாட்டில் மத்திய வர்த்தகம், தொழில் மற்றும் விமானப்போக்குவரத்து துறை அமைச்சரான சுரேஷ் பிரபு கலந்துக்கொண்டார்
2. **RCEP – Regional Comprehensive Economic Partnership**
3. இம்மாநாட்டில் 10 ஆசியான் நாடுகளும், 6 ASEAN FTA நாடுகளான இந்தியா, சீனா, ஜப்பான், கொரியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளும் கலந்துக்கொண்டனர். இம்மாநாட்டு ஆகஸ்ட் 30, 31 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது
4. தலைமையிடம் : சிங்கப்பூர்
5. நாணயம் : சிங்கப்பூர் வெள்ளி
6. அதிபர் : அலிமா யாகோப்பு
7. பிரதமர் . லீ ஹசியன் லோங்

2. எஸ் - 400 டிரையம்ஃப் ரக ஏவுகணைகளை எந்த நாட்டிடமிருந்து இந்தியா வாங்க உள்ளது?

**விடை: ரஷ்யா**

**விளக்கம்:**

1. எதிரி நாட்டு போர் விமானங்கள் இடைமறித்து அழிக்கவல்ல S-400 ரக ஏவுகணைகளை, ரஷ்யாவிடமிருந்து சீனா கடந்த 2014-இல் வாங்கியது
2. இதைத் தொடர்ந்து, இந்திய – சீன எல்லையில் வான் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த ரக ஏவுகணைகளை வாங்க இந்தியாவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது
3. இச்செய்தியினை வரும் செப்டம்பர் 6-ஆம் தேதி நடைபெற உள்ள இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான இருதரப்பு பேச்சு வார்த்தையில், இந்தியா அமெரிக்காவிடம் தெரிவிக்க உள்ளது
4. முன்னதாக, அமெரிக்க அதிபர் தேர்தலில் தலையிட்டதாக எழுந்த குற்றச்சாட்டிலும், கிரீமியாவை தங்களது நாட்டுடன் இணைத்துக் கொண்ட விவகாரத்திலும் ரஷ்யா மீது ராணுவ ரீதியிலான தடைகளை அமெரிக்கா விதித்தது
5. ரஷ்யாவிடமிருந்து ராணுவ தளவாடங்களை வாங்கும் நாடுகள், அமைப்புகள் மீது தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்தது குறிப்பிடத்தக்கது

3. எந்த நாட்டில் பள்ளிகளில் செல்லிடப்பேசிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது?

**விடை: பிரான்ஸ்**

**விளக்கம்:**

1. ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் இடைவேளை நேரம் உட்பட நாள் முழுவதும் செல்லிடப்பேசிகளை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் பேரிடர் காலங்களில் மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கு இந்த தடையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது

We Shine Academy TM

4. முதலாவது SAARC விவசாய ஒத்துழைப்பு வணிக கூட்டத்தை நடத்திய நாடு எது?

**விடை: நேபாளம்**

**விளக்கம்:**

1. SAARC விவசாய ஒத்துழைப்பு வணிக மன்றத்தின் முதல் கூட்டம் நேபாள தலைநகர் காத்மாண்டுவில் ஐ.நா உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மற்றும் ஆசிய விவசாயிகள் சங்கம் ஆகியவை சர்வதேச விவசாய மேம்பாட்டு நிதியத்தின் ஆதரவுடன் இணைந்து நடத்தியது.

5. இந்தியா எந்த நாட்டுடன் பாதுகாப்பு மற்றும் வெளியுறத்துறை அமைச்சர்களுக்கிடையேயான முதலாவது பேச்சுவார்த்தையை நடத்தியது?

**விடை: அமெரிக்கா**

**விளக்கம்:**

1. இந்தியாவும், அமெரிக்காவும் பாதுகாப்பு மற்றும் வெளியுறத்துறை அமைச்சர்களுக்கிடையேயான பேச்சுவார்த்தையை நடத்த கடந்த ஜூன் மாதம் முடிவு செய்தது. இதன்படி ஜூலை மாதம் நடத்த திட்டமிடப்பட்ட நிலையில் தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள் காரணமாக அப்பேச்சுவார்த்தை நிறுத்தி வைக்கப்பட்டு செப்டம்பர் 6-ல் நடைபெற்றது
2. டெல்லியில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சரான சுஷ்மா ஸ்வராஜ் மற்றும் அமெரிக்கா வெளியுறவுத்துறை அமைச்சரான மைக் பாம்பியோ ஆகியோர் பங்கேற்றனர்

6. இந்தியா எந்த நாட்டுடன் இணைத்து **KAZIND 2018** என்ற ராணுவப்பயிற்சியில் ஈடுபட உள்ளது?

**விடை: கஜகஸ்தான்**

**விளக்கம்:**

1. இந்திய ராணுவமும், கஜகஸ்தான் ராணுவமும் இணைந்து செப்டம்பர் 10 முதல் 23 வரை கஜகஸ்தான் நாட்டின் ஒட்டார் பகுதியில் ராணுவப்பயிற்சி நடத்தவுள்ளது
2. இந்த ஆண்டு நடைபெறும் இப்பயிற்சி மூன்றாவது ராணுவப்பயிற்சி ஆகும். இரண்டாவது ராணுவப்பயிற்சி கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்றது

7. **"SLINEX-2018"** என்ற கடற்படை பயிற்சியில் பங்கேற்கும் இரண்டு நாடுகள் எவை?

**விடை: இந்தியா மற்றும் இலங்கை**

**விளக்கம்:**

1. இந்தியா மற்றும் இலங்கை கடற்படைகள் இணைந்து நடத்தும் "**SLINEX-2018"** என்ற கூட்டு கடற்கரை பயிற்சி **திரிகோணமலையில் செப்டம்பர் 7-ல்** தொடங்கி செப்டம்பர் 13 வரை நடைபெறுகிறது
2. "**SLINEX"** கூட்டுப்பயிற்சி இதுவரையில் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறையே நடைபெற்று வந்தது. இந்த ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடைபெற உள்ளது

8. உலக சுகாதார அமைப்பின் தலைவர் யார்?

**விடை: டெட்ரோஸ் கேப்ரியசஸ்**

**விளக்கம்:**

1. இவர் மத்திய அரசு அறிவித்துள்ள ஆயுஷ்மான் பாரத் என்ற மருத்துவக்காப்பீடு திட்டதிற்கு பாராட்டு தெரிவித்துள்ளார்
2. நாட்டு மக்களில் 50கோடி பேருக்கு மருத்துவக்காப்பீடு அளிக்கும் ஆயுஷ்மான் பாரத் திட்டம் செப்டம்பர் 25-ம் தேதி தொடங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்த ஆண்டு சுதந்திர தின உரையின்போது அறிவித்தார்

We Shine Academy TM

9. எந்த ஆண்டில் தெற்காசிய மண்டலம் போலியோ இல்லாத மண்டலமாக அறிவிக்கப்பட்டு இன்று வரை அது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது?

**விடை: 2014**

**விளக்கம்:**

1. இம்மண்டலத்தில் தாய் இறப்பு விகிதம் 69சதவீதமாக குறைந்துள்ளது. இந்தியா தெற்றுதோல்நோயையும், மாலத்தீவு, இலங்கை மற்றும் தாய்வாந்து ஆகியவை நீணநீர் யானைக்கால் நோயையும் முற்றிலுமாக ஒழித்துள்ளனர்
2. மாலத்தீவு, இலங்கை ஆகிய இருநாடுகளும் மலேரியாவையும் ஒழித்துள்ளனர்

10. எந்த நகரத்தில் 2-வது உலக ஹிந்து மாநாடு நடைபெற்றது?

**விடை: சிகாகோ**

**விளக்கம்:**

1. 2-வது உலக ஹிந்து மாநாடு செப்டம்பர் 7 முதல் 9 வரை நடைபெற்றது. கடந்த 1893 ஆம் ஆண்டு சிகாகோவில் நடைபெற்ற சர்வதேச மதமாநாட்டில் **சுவாமி விவேகானந்தர் உரையாற்றியதன் 125-வது** ஆண்டை குறிக்கும் வகையில் அங்கு நடைபெறும் **2-வது உலக ஹிந்து மாநாட்டில் இந்திய குடியரசு துணைத்தலைவர் வெங்கைய்யநாயுடு** அவர்கள் கலந்துக்கொண்டு உரையாற்றினார்

11. சர்வதேச பெண்கள் தொழில்முனைவோர் உச்சிமாநாட்டை நடத்தும் நாடு எது?

**விடை: நேபாளம்**

1. **“Equality begins with Economic Empowerment”** என்ற கருப்பொருளுடன் நிகழாண்டின் சர்வதேச பெண்கள் தொழில்முனைவோர் உச்சிமாநாடு நேபாள தலைநகரான காத்மாண்டுவில் நடைபெற்றது

12. **IOWAVE18** என்ற பன்னாட்டு சுனாமி ஒத்திகை எந்த பெருங்கடல் பகுதியில் நடைபெற்றது?

**விடை: இந்தியப் பெருங்கடல்**

**விளக்கம்:**

யுனெஸ்கோ அமைப்பின் கடல்ஆராய்ச்சி ஆணையம் ஏற்பாடு செய்திருந்த சுனாமியை எதிர்க்கொள்ளுவது குறித்த என்ற பன்னாட்டு சுனாமி ஒத்திகை பயிற்சியை இந்தியபெருங்கடலில் இந்தியா மற்றும் 23 நாடுகள் இணைந்து மேற்கொண்டன

11. எந்த நாட்டுடன் இணைந்து இந்தியா **Nomadic Elephant – 2018 (நாடோடி யானை – 2018**) என்ற ராணுவப்பயிற்சியை நடத்தி வருகிறது?

**விடை: மங்கோலியா**

**விளக்கம்:**

1. இந்திய ராணுவமும், மங்கோலிய ராணுவமும் இணைந்து இந்த ராணுவப்பயிற்சியை செப்டம்பர் 10 முதல் 21 வரை நடத்துகிறது
2. இந்தியாவும் மங்கோலிய ராணுவமும் இணைந்து நடத்தும் இவ்வகையான பயிற்சியை 2006 முதல் இருநாடுகளுக்கிடையே வலிமையான நட்புறவை ஏற்படுத்துவதற்காக நடத்தப்படுகிறது

We Shine Academy™

12. இந்தியா எந்த நாட்டிற்காக அண்மையில் 500மெகாவாட் மின்சாரத்தை வழங்கியது?

**விடை: வங்கதேசம்**

**விளக்கம்:**

1. இந்திய பிரதமர் நரேந்திர மோடி, வஙடகதேச பிரதமர் ஷேக் ஹசீனா, மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி, திரிபுரா முதல்வர் பிப்லப் குமார், இந்திய வெளியுறத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் வங்கதேச வெளியுறத் துறை அமைச்சர் இதனை தொடங்கி வைத்தனர்
2. இதைத்தவிர அகுரா-அகர்தலா என்ற நகரங்களுக்கிடையே ரயில் பயனத்தையும் தொடங்கி வைத்தனர்

13. 6-வது கிழக்காசிய பொருளாதார அமைச்சர்கள் கூட்டத்தை நடத்திய நாடு எது?

**விடை: சிங்கப்பூர்**

**விளக்கம்:**

1. ஆசியான் தலைமை பொறுப்பு தற்சமயம் சிங்கப்பூர் வசம் உள்ளது. இதனால் 6-வது கிழக்காசிய பொருளாதார அமைச்சர்கள் கூட்டம் மற்றும் 15-வது இந்தியா-ஆசியான் பொருளாதார அமைச்சர்கள் கூட்டம் ஆகியவற்றை சிங்கப்பூர் நடத்தியது
2. இக்கூட்டத்தில் 10 ஆசியான் நாடுகள் மற்றும் அதன் பேச்சுவார்த்தை நாடுகளான ஆஸ்திரேலியா, சீனா, இந்தியா, ஜப்பான், கொரியா, நியூசிலாந்து, ரஷ்யா மற்றும் அமெரிக்கா அகிய நாடுகளின் பொருளாதார அமைச்சர்களும் கலந்துக்கொண்டனர்
3. இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் கோலாலம்பூரில் அடுத்த ஆசியான்-இந்தியா வனிக உச்சி மாநாடு நடக்கும். திட்டமிட்டப்படி 4-வது இந்தியா-ஆசியான் பேச்சுவார்த்தை உச்சிமாநாடு புதுடெல்லியில் 2019-பிப்ரவரி 21-23 ஆகிய தேதிகளில் நடைபெறும்
4. தலைமையிடம் : சிங்கப்பூர்
5. நாணயம் : சிங்கப்பூர் வெள்ளி
6. அதிபர் : அலிமா யாகோப்பு

14. 4-வது சர்வதேச ஆயுர்வேத மாநாட்டை நடத்திய நாடு எது?

**விடை: நெதர்லாந்து**

1. **விளக்கம்:** நெதர்வாந்திலும் ஐரோப்பாவிலும் உள்ள அதன் அண்டைய நாடுகளிலும் ஆயுர்வேத மருத்துவ முறையை பரப்புவதை நோக்கமாகக் கொண்டு இந்த மாநாடு நடத்தப்படுகிறது
2. ஆயர்வேதம் உட்பட நலவாழ்வில் இந்தியா-நெதர்லாந்துக்கு இடையேயான ஒத்துழைப்பு என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றும் நடத்தப்பட்டது.

15. விஸ்டோக் - 2018 என்ற போர் ஒத்திகையை நடத்திய நாடு எது?

**விடை : ரஷ்யா**

**விளக்கம் :**

1. பனிப்போர் காலத்துக்குப் பிறகு, இதுவரை இல்லாத அளவுக்கு மிகப் பிரம்மாண்டமான போர் ஒத்திகையை ரஷ்யா செப்படம்பர் 11 அன்று தொடங்கியது.

16. **“ ஃபிளாரன்ஸ் புயல்”** எந்தக் கடலில் உருவாகியுள்ளது?

**விடை : அட்லாண்டிக் கடல் ( பிலிப்பைன்ஸ்-ஐ இப்புயல் தாக்கியது)**

**விளக்கம் :**

1. பல ஆண்டுகள் கழித்து அமெரிக்காவின் கிழக்குக் கடலோராப் பகுதியைத் தாக்கவிருக்கும் இந்தப் புயல், கரையைக் கடக்கும்போது மணிக்கு 220 கி.மீ வேகத்தில் காற்று வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

17. உலகிலேயே மிகவும் கட்டுபாடற்ற கட்டண மெட்ரோ ரயில் நிலையம் எது?

**விடை : ஹனோய் (வியட்நாம்)**

**விளக்கம் :**

1. உலகிலேயே இரண்டாவது கட்டுபாடற்ற கட்டண மெட்ரோ ரயில் நிலையமாக டெல்லி மெட்ரோ ரயில் நிலையம் உள்ளது.

18. இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே **யூத் அபியாஸ்** ராணுவப்பயிற்சி நடைபெற உள்ளது?

**விடை : அமெரிக்கா**

**விளக்கம் :**

1. செப்டம்பர் 16 அன்று உத்தரகாண்டில் தொடங்கும் இந்த பயிற்சி 2 வாரக்காலம் நடைபெற உள்ளது.

- தலைநகரம் : வாஷிங்டன்
- அதிபர் : டொனால்டு டிரம்ப்
- நாணயம் : டாலர்

19. வெளிநாடுகளிலிருந்து வந்து குடியேறுபவர்களுக்கு நிரந்தர குடியுரிமையை வழங்கும் முதல் வளைகுடா நாடு எது?

**விடை : கத்தார்**

**விளக்கம் :**

1. கத்தார் தாய்மார்களின் குழந்தைகள், 20 ஆண்டுகளுக்கு மேலாக கத்தாரில் வாழும் வெளிநாட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

20. இந்தியாவிற்காக ர.்.பேல் ரக போர் விமானம் வாங்குவதற்காக எந்த நாட்டுடன் 2016 ஆம் ஆண்டு மத்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது?

**விடை : பிரான்ஸ்**

**விளக்கம் :**

1. பிரான்ஸ் நாட்டின் "டஸால்ட் ஏவியேஷன்" நிறுவனத்திடமிருந்து 126 ர.்.பேல் ரக போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கு இந்தியா பேச்சுவார்த்தை நடத்தியது.
2. ஒரு போர் விமானத்தின் விலை ரூ.526 கோடி என்று பேச்சுவார்த்தை செய்யப்பட்டாலும் ஒப்பந்தம் எதுவும் கையெழுத்திடப்படவில்லை.

21. இந்தியா மற்றும் ரஷ்யா நாடுகளுக்கிடையேயான தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான 23-வது மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை : மாஸ்கோ (ரஷ்யா)**

**விளக்கம் :**

1. இதனை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜும் ரஷ்ய துணை பிரதமர் யூரி போரிசோவ்வும் செப்படம்பர் 14-ல் தொடங்கி வைத்தனர்.
2. இருநாடுகளுக்கிடையேயான 19-வது உச்சி மாநாடு அடுத்த மாத தொடக்கத்தில் இந்தியாவில் நடைபெற உள்ளது.

We Shine Academy

22. வட மற்றும் தென்கொரிய நாடுகளின் தொடர்பு அலுவலகம் எங்கு திறக்கப்பட்டுள்ளது?

**விடை : கேசாங் (வடகொரியா)**

**விளக்கம் :**

1. வடகொரிய – தென்கொரிய இடையிலான உறவை பலப்படுத்தும் வகையில் இருநாடுகளும் இணைந்து இந்த தொடர்பு அலுவலகத்தை செப்டம்பர் 14-ல் திறந்துள்ளது.
2. வடகொரிய மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் அதிபர்கள் பங்கேற்ற பேச்சுவார்த்தை ஜுன் 12-ல் சிங்கப்பூரில் நடைபெற்றது.

23. ஜி-20 நாடுகளுக்கான வர்த்தகம் மற்றும் முதலீட்டு அமைச்சர்கள் கூட்டம் எங்கு நடைபெற்றது?

**விடை : அர்ஜென்டினா**

**விளக்கம்** :

1. இம்மாநாடு அர்ஜென்டினாவில் உள்ள மார்டெல் ப்ளாடா என்ற இடத்தில் செப்டம்பர் 14 மற்றும் 15 தேதிகளில் நடைபெற்றது.
2. இம்மாநாட்டில் இந்தியாவின் சார்பில் வர்த்தகம், தொழில் மற்றும் சிவில் விமானப்போக்குவரத்து துறை அமைச்சர் சுரேஷ் பிரபு கலந்துக்கொண்டார்.
    - தலைநகரம் : ப்யூனோஸ் எயர்ஸ்
    - அதிபர் : மோரிசியோ மெக்ரி
    - நாணயம் : பெசோ

24. காலநிலை நடவடிக்கை குறித்த உலகளாவிய உச்சி மாநாட்டை நடத்திய நாடு எது?

**விடை: அமெரிக்கா**

We Shine Academy TM

**விளக்கம்:**

1. காலநிலை மாற்றத்திற்கான எதிர்கால நடவடிக்கைகள், திட்டங்கள் குறித்து விவாதிப்பதற்கு பல்வேறு அதிகாரிகள் மற்றும் கொள்கை தயாரிப்பாளர்களை உருவாக்க இது நடத்தப்பட்டது.

25. எந்த நாட்டுடனான ராஜீய உறவுகள் ஏற்பட்டு 70 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது?

**விடை: ருமேனியா**

**விளக்கம்:**

1. தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ருமேனியாவுடன் ராஜீய உறவு ஏற்பட்டு 70 ஆண்டு நிறைவடைந்ததையொட்டி அந்நாட்டிற்கு இந்திய குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்யா நாயுடு அவர்கள் சிறப்பு பயணமாக சென்றுள்ளார்.

We Shine Academy TM

26. ரஷிய ஊக்கமருந்து தடுப்பு ஆணையம் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கிய அமைப்பு எது?

**விடை: WADA (World Anti – Doping Agency)**

1. WADA என்பது உலக ஊக்க மருந்து தடுப்பு அமைப்பு ஆகும்.
2. கடந்த 2015ம் ஆண்டு ஊக்கமருந்து பயன்படுத்திய ரஷிய தடகள வீரர்கள் சிக்காமல் காப்பாற்றுவதற்காக ருஸாடா, அந்நாட்டு விளையாட்டு அமைச்சகத்தின் உதவியுடன் பல்வேறு வழிமுறைகளை கையாண்டதாக புகார்கள் எழுந்தன.

27. ஹாங்காங் நகருக்கும், சீனாவின் தொழில் உற்பத்தி மையமான எந்த மாகாணத்துக்கும் இடையில் அதிவேக ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது?

**விடை: குவாங்டாங் மாகாணம்**

**விளக்கம்:**

1. இதுவரை ஹாங்காங் மற்றும் ஷென்ஷென் நகரங்களுக்கிடையே பயணிக்க ஒரு மணி நேரம் தேவைப்பட்ட நிலையில், இந்த புதிய

அதிவேக ரயில்பாதை மூலம் 14 நிமிடங்களில் ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்துக்கு சென்று விட முடியும்.

2. 8 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட இந்த பாதை, 26km நீளம் கொண்டது.

28. UN WTO (UN World Tourism Organization)-ன் 7வது சர்வதேச மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை: சியோல், கொரிய குடியரசு**

**விளக்கம்:**

1. இதன் கருத்து : **"Urban Tourism : A 2030 Vision for urban Tourism".**
2. இது செப்டம்பர் 16 முதல் 19 வரை நடைபெற்றது.

29. சாகர்மாதா நட்பு-2918 என்ற இராணுவப் பயிற்சி எந்த இருநாடுகளுக்கிடையே நடைபெறுகிறது?

**விடை: நேபாளம் மற்றும் சீனா**

**விளக்கம்:**

1. இது சீனாவின் தென்மேற்கு சிச்சுவான் மாகாணத்தின் தலைநகரான செங்டுவில் நடைபெற்றது. இந்தப் பயிற்சியின் நோக்கம் பேரிடர் மேலாண்மை மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்து போராடுவதின் நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்வதாகும்.
2. செப்டம்பர் 10 அன்று தொடங்கி **BIMSTEC** அமைப்பின் சார்பில் நடந்த MILEX-18 இராணுவப்பயிற்சியில் கலந்துகொள்ளாத நேபாளம் தற்போது இப்பயிற்சியில் கலந்து கொள்கிறது.

30. எந்த நாட்டில் திருவள்ளுவரின் சிலை திறக்கப்பட உள்ளது?

**விடை: இலங்கை**

**விளக்கம்:**

1. இலங்கை தலைநகரத்தில் உள்ள கொழும்பு தமிழ் சங்கத்தில் திருவள்ளுவர் சிலை செப்டம்பர் 29ல் திறக்கப்படுகிறது.

31. 2018ம் ஆண்டின் ஜி20 வர்த்தகம் மற்றும் முதலீட்டு அமைச்சரவை கூட்டத்தை நடத்திய நாடு எது?

**விடை: அர்ஜென்டினா**

1. அர்ஜென்டினாவில் உள்ள மார்கடெல்பிளாடாவில் நடைபெற்ற இம்மாநாட்டின் இந்தியாவின் சார்பாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் சுரேஷ் பிரபு கலந்து கொண்டார்.
2. இந்தியா, அர்ஜென்டினா, பிரேசில், கனடா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ், ஜெர்மனி, இந்தோனேசியா, ஜப்பான், மெக்சிகோ, ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகியவை ஜி-20 உறுப்பு நாடுகள் ஆகும்.

32. கல்வி மற்றும் சுகாதாரப் பணிகள் தரவரிசைப் பட்டியலில், இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**விடை: 158**

**விளக்கம்:**

1. மொத்தம் 195 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வின்படி இதில் பின்லாந்து (Finland) முதலிடத்தில் உள்ளது.

33. சார்க் அமைப்பின் ஆலோசனைக் கூட்டம் எங்கு நடைபெற்றது?

**விடை: நியூயார்க் (அமெரிக்கா)**

**விளக்கம்:**

1. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பூடான் மற்றும் மாலத்தீவு ஆகிய நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட சார்க் அமைப்பின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நியூயார்க்கில் நடைபெற்றது.

We Shine Academy™

2. இதில் இந்தியாவின் சார்பில் கலந்துக் கொண்ட சுஷ்மா சுவராஜ் தெற்காசிய பகுதியில் பயங்கரவாதத்தால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் பற்றி பேசினார்.
3. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பிரிக்ஸ் அமைப்பின் ஆலோசனை கூட்டமும் நியூயார்க்கில் நடைபெற்றது.
4. இதில் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்ட சுஷ்மா சுவராஜ் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் செய்வது பற்றி பேசினார்.

34. உலக இணைய மாநாட்டை **(World Internet Conference)** இந்தாண்டு நடத்தவுள்ள நாடு எது?

**விடை: சீனா**

**விளக்கம்:**

1. ஐந்தாவது உலக இணைய மாநாடு இந்தாண்டு சீனாவில் நவம்பர் 7 முதல் 9 வரை உச்சேன் நகரில் நடைபெற உள்ளது.

35. எந்த எல்லைப்புறத்தில் இந்தியாவின் முதல் திறன்மிகு வேலி **(Smart Fence)** அமைக்கும் முன்னோடி திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.?

**விடை: பாகிஸ்தான் எல்லை**

**விளக்கம்:**

1. ஜம்மு-காஷ்மீரில் உள்ள பிளுராவில் BSF தலைமையகத்தில் இந்தியா – பாகிஸ்தான் சர்வதேச எல்லையில் திறன்மிகு வேலி **(Smart Fence)** அமைப்பதற்கான இரண்டு திட்டங்களை மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் துவங்கி வைத்தார்.

36. ஹைட்ரஜனால் இயங்கும் உலகில் முதல் இரயிலை அறிமுகம் செய்துள்ள நாடு எது?

**விடை: ஜெர்மனி**

We Shine Academy

**விளக்கம்:**

1. நீராவி மற்றும் நீரை மட்டும் வெளியிடும் ஹைட்ரஜனால் இயங்கும் உலகின் முதல் இரயிலை ஜெர்மனி அறிமுகம் செய்துள்ளது. நீல நிறத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள Coradia iLint என்ற இந்த ரயிலை பிரான்ஸ் நாட்டின் TGV அல்ஸ்டாம் நிறுவனம் வடிவமைத்துள்ளது.

# விருதுகள்

1. ஆசியாவின் நோபல் விருது அறியப்படும் விருது எது?

**விடை: ராமன் மகசேசே விருது (Ramon Magsaysay)**

**விளக்கம்:**

1. பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள கலாச்சார மையத்தில் ஆகஸ்ட் 31 அன்று நடைபெற்ற விழாவில் 2 இந்தியர்கள் உட்பட 6 பேருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
2. இவ்விருது பெற்ற இந்தியர்கள்- **பாரத் வட்வானி (Bharat Vatwari) மற்றும் சோனம் வாங்சுக் (Sonam Wangchuk)**

2. எந்த முன்னாள் இந்திய இராணுவப்படை தளபதிக்கு அமெரிக்காவின் "Legion of Merit" என்ற விருது வழங்கப்பட்டது?

**விடை: தல்பீர் சிங் சுகாக்**

**விளக்கம்:**

1. முன்னாள் இந்திய ராணுவப்படை தளபதி தல்பீர் சிங் சுகாக்கிற்கு அமெரிக்காவின சிறந்த தளபதி விருது **("Legion of Merit")** ஆகஸ்ட் 2014 முதல் டிசம்பர் 2016 வரையிலான காலப்பகுதியில் இந்திய ராணுவதளபதியாக சிறந்த சேவை புரிந்தமைக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

2. 1946 ஆம் ஆண்டில் படைத்தளபதி ராஜேந்திர சிங் ஜி ஜாடேசாவிற்கு பிறகு இவ்விருதை பெறும் இரண்டாவது இந்திய ராணுவப்படை தளபதியாக தல்பீர் சிங் உள்ளார்.
3. **“Legion of Merit” விருது Degree of Chief Commander, Degree of Commander, Degree of the Officer Degree of Legionnaire** என்ற நான்கு பிரிவுகளில் வழங்கப்படுகிறது.

3. பாரதிய மனவாட விகாஷ் புரஸ்கார் (Bharatiya Manavata Vikas Puraskar) விருது பெறுவர்கள் யார்?

**விடை: ஷிபானா ஆஸ்மி & நந்திதா தாஸ்**

**விளக்கம்:**

1. சமூக நீதி, மனிதநலம், சமத்துவம் உள்ளிட்ட சமுதாய பங்களிப்பிற்காக இவ்விருது அளிக்கப்பட்டது.
2. தனியார் ஊடக நிறுவனமான **Daily Indian Media** இந்த விழாவை நடத்தியது.

4. இந்த ஆண்டு சிறந்த ஆசிரியருக்கான விருது யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை: பி.ரவிச்சந்திரன்**

**விளக்கம்**

1. முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வப்பள்ளி ராதாக்கிருஷ்ணனின் 130-வது பிறந்தநாளையொட்டி தமிழக பள்ளிக்கல்வித்துறை சார்பில் டாக்டர் ராதாக்கிருஷ்ணன் விருது, காமாரஜர் விருது மற்றும் தூய்மைப்பள்ளி வழங்கும் விழா நடைபெற்றது.
2. இதில் சிறந்த ஆசிரியருக்கான விருது பார்வைகுறைபாடுடைய பள்ளிக்கொண்டா அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பி.ரவிச்சந்திரனுக்கு தமிழக முதல்வர் வழங்கினார்.


We Shine Academy TM

3. இவ்விழாவில் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் "காந்திய அனுபவ கல்வி மற்றும் அடிப்படைக்கல்வி" என்ற நூலை தமிழக முதல்வர் வெளியிட்டார்.

5. சரளா புரஸ்கார் விருது (Sarala Puraskar Award) – யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை : கவிஞர் சத்ருநா பாண்டவ்**

**விளக்கம்:**

1. ஒடிய மொழியக் கவிஞரான இவரின் **"மிஸ்ரா துர்பாத்" (Misra Dhrupad)** என்ற கவிதை தொகுப்பிற்கு இந்த விருது வழங்கப்பட்டது.

6. இந்திரா சிவசைலம் அறக்கொடை விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர் யார்?

**விடை : ஜெயந்தி குமரேஷ்**

**விளக்கம்:**

1. இவர் வீணை இசைக் கலைஞர் ஆவார்.
2. இவர் விருது வரும் அக்டோபர் 12 ஆம் தேதி வழங்கப்பட உள்ளது.

7. தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக மத்திய அரசின் எத்தனை விருதுகள் தமிழக அரசுக்கு வழங்கப்பட்டது?

**விடை: 3**

**விளக்கம்:**

1. 2017-18 நிதி ஆண்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 58 லட்சம் பணியாளர்களுக்கு 23.89 கோடி மனித உழைப்பு நாள்களுக்கு ரூ.5344 கோடி ஊதியம் வழங்கியது உள்ளிட்டவற்றில் சிறந்த செயல்பாட்டிற்காக தேசிய அளவில் முதலிடத்திற்கான விருது வழங்கப்பட்டது.

We Shine Academy TM

8. ஆண்டின் சிறந்த மருத்துவர் என 2018-ஆம் ஆண்டுக்கான டாக்டர் பி.சி.ராய் தேசிய விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர் யார்?

**விடை: பசந்த் குமார் மிஸ்ரா**

**விளக்கம்:**

1. ஒடிசாவை சேர்நத இவர் இந்திய மருத்துவதுறையில் வழங்கப்படும் மிக உயர்ந்த கௌரவ விருதான பி.சி.ராய் தேசிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
2. இவ்விருது 2019-ல் மருத்துவ தினமான ஜுலை 1 அன்று குடியரசுத் தலைவரால் வழங்கப்படும். இவ்விருது 1962- ஆம் ஆண்டு இந்திய மருத்துவகழகத்தால் நிறுவப்பட்டது.
3. தெற்காசியாவிலேயே முதல் முறையாக காமாகதிர் அறுவைச்சிகிச்சை செய்ய உள்ள முதல் மருத்துவர் இவர் ஆவார்.

9. மீரா புரஸ்கர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எழுத்தாளர் யார்?

**விடை: சவாய் சிங் ஷெகாவத்**

**விளக்கம்:**

1. ராஜஸ்தான் சாகித்ய அகாடெமியால் வழங்கப்படும் இந்த உயர்ந்த விருதுக்கு ஜெய்ப்பூரை சார்ந்த ஹிந்தி எழுத்தாளரான இவருக்கு மீரா புரஸ்கர் விருது வழங்கப்படுகிறது.

10. ராஜ்பாஷா கீர்த்தி (**Rajbhasha Kirti**) விருதைப் பெற்ற வங்கி எது?

**விடை: PNB (Punjab National Bank)**

**விளக்கம்:**

1. 2017 -18 ஆம் ஆண்டில், அதிகாரப்பூர்வ மொழிக் கொள்கையை அமல்படுத்துவதில் சிறந்து செயலாற்றியதற்காக இந்த விருது வழங்கப்பட்டது.
2. ஹிந்தி மொழியை, PNB – ன் அனைத்துக் கிளைகளிலும் உட்புகுத்தியதை பெருமைப்படுத்தும் வகையில், இந்த விருது PNB –ன்

செயல் அதிகாரி மற்றும் இயக்குநரான சுனில் மேத்தாவிடம் வழங்கப்பட்டது.

11. எந்த ஹிந்தி நடிகைக்கு சிறப்பு மெரில் ஸ்ட்ரீப் விருது வழங்கப்பட்டது?

**விடை : ஐஸ்வர்யா ராய்**

**விளக்கம் :**

1. வாஷிங்டனில் நடந்த முதலாவது **Women in Film and Television India** விருது வழங்கும் விழாவில் நடிகை ஐஸ்வர்யா ராய்-க்கு சிறப்பு மெரில் ஸ்ட்ரீப் விருது வழங்கப்பட்டது.
2. ஹிந்தி மற்றும் ஆங்கில திரையுலகில் சிறந்து விளங்கும் பெண் திறமையாளர்களை சிறப்பிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுகிறது.

12. ராஜீவ் காந்தி கேல்ரத்னா விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள இந்திய கிரிக்கெட் வீரர் யார்?

**விடை : விராட் கோலி**

**விளக்கம் :**

1. விளையாட்டுத் துறையில் சிறப்பாக சாதனை புரிந்து நாட்டிற்கு பெருமை சேர்க்கும் வீரர், வீராங்கனைகளுக்கு ராஜீவ் காந்தி கேல்ரத்னா, அர்ஜுனா விருதுகள் மத்திய அரசால் வழங்கப்படுகின்றன.
2. அதன்படி இந்திய கிரிக்கெட் அணி கேப்படன் விராட்கோலி, மல்யுத்த வீராங்கனையும் உலக சாம்பியனுமான மீராபாய் சானு பெயர்கள் இணைந்து ராஜீவ் காந்தி கேல்ரத்னா விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. விராட்கோலிக்கு கடந்த ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
3. அர்ஜுனா விருதுக்கு நிரஜ் சோப்ரா உள்ளிட்ட 20 வீரர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன.

13. சிறந்த பயிற்சியாளருக்கு வழங்கப்படும் விருது எது?

**விடை : துரோணாச்சாரியார் விருது**

We Shine Academy™

**விளக்கம் :**

1. இவ்விருதை இந்த ஆண்டு பெறுபவர்கள்:
    - சி.கே. குட்டப்பா - குத்துச்சண்டை
    - விஜய் சர்மா - பளுதூக்குதல்
    - சீனிவாச ராவ் - டேபிள் டென்னிஸ்
    - சுக்தேவ் சிங் - தடகளம்
    - கிளாரென்ஸ் லோபோ - ஹாக்கி
    - தாரக் சிங் - கிரிக்கெட்
    - ஜிவன் குமார் - ஜுடோ
2. வாழ்நாள் சாதனையாளர் விருது:
    - பீடு – தடகளம்
    - ஒழுங்கீனம் காரணமாக துரோனாச்சாரியார் விருதுகள் பட்டியலில் இருந்து 2013 – ஆம் ஆண்டு முதல் பயிற்சி அளித்து வந்த வில்வித்தை பயிற்சியாளர் ஜிவன்ஜோத் சிங் தேஜா பெயர் நீக்கப்பட்டது.
    - இதேபோல் டேபிள் டென்னிஸ் பயிற்சியாளர் சந்தீப் குப்தா பெயர் துரோணாச்சாரியார் விருதுகள் பட்டியலில் இருந்து விடுபட்டதற்கு நட்சத்திர வீராங்கனை மணிகா பத்ரா வேதனை தெரிவித்தார்.

We Shine Academy TM

14. RoSPA விருது (Royal Society for the Prevention of Accidents Award) பெற்ற இந்தியா மெட்ரோ ரயில் கார்பரேஷன் எது?

**விடை : (LMRC) லக்னோ மெட்ரோ ரயில் கார்பரேஷன்**

**விளக்கம் :**

1. இந்த சர்வதேச விருதைப் பெறும் இந்தியாவின் முதல் மெட்ரோ ரயில் கார்பரேஷன் இதுவாகும்.
2. 2018 ஆம் ஆண்டிற்கான திட்டம் உள்கட்டமைப்பு பிரிவில் LMRC Phase IA – க்கான வெள்ளி விருதைப் பெற்றது.

15. நிகழாண்டுக்கான மதிப்புமிக்க சரளா புரஸ்கார் - 2018 விருதைப் வென்றுள்ள பிரபல ஒடிய மொழிக்கவிஞர் யார்?

**விடை : சத்ருகனா பாண்டவ்**

**விளக்கம் :**

1. **"மிஸ்ரா துருபத்"** என்ற கவிதை தொகுப்பிற்காக 2018-ஆம் ஆண்டுக்காண சரளா புரஸ்கார் விருதைப் இவர் பெறுகிறார்.
2. இவ்விருது **அக்டோபர் 6-** அன்று இவருக்கு வழங்கப்படுகிறது.

16. புற்றுநோய் உயிரிக்குறியீடுகளை கண்டறிவதற்காக எந்த இந்திய வம்சாவளி பேராசிரியருக்கு அமெரிக்கா புற்றுநோய் மையம் **"தலைசிறந்த ஆராய்ச்சியாளர் விருதை"** வழங்கியுள்ளது?

**விடை : அருள் சின்னையன்**

**விளக்கம் :**

1. அமெரிக்க தேசிய புற்றுநோய் மையம் இந்திய வம்சாவளி பேராசிரியர் அருள் சின்னையனுக்கு தலைசிறந்த ஆராய்ச்சியாளர் விருது வழங்கி கௌரவித்துள்ளது.
2. மிச்சிகன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அருள் சின்னையனுக்கு இவ்விருதும் நிதியுதவியும் அளிக்கப்பட்டு அடுத்த ஏழு ஆண்டுகளுக்கான புற்றுநோய் சிகிச்சை முறைகளுக்கான ஆராய்ச்சி மேற்கொள்ள உதவி செய்யப்பட்டுள்ளது.

17. வாழ்வதற்கு உகந்த இடங்களில் **(Ease of Living Index)** முதலிடம் வகிக்கும் மாநிலம்

**விடை : ஆந்திர பிரதேசம்**

**விளக்கம்:**

1. இதில் ஒடிசா 2-ம் இடத்திலும், மத்திய பிரதேசம் 3-ம் இடத்திலும் உள்ளது.

18. இந்த ஆண்டுக்கான தயான்சந்த் விருதை பெற்றவர்கள் யார்?

**விடை :சத்தியதேவ் பிரசாத் (வில்வத்தை), பரத்குமார் சேத்ரி (ஹாக்கி), பாபி அலோசியஸ் (தடகளம்), சௌகலே தடு தத்தாரே (மல்யுத்தம்)**

19. முதன் முறையாக ராஜீவ்காந்தி கேல்ரத்னா விருது பெற்ற இந்திய கிரிக்கெட் வீரர் யார்?

**விடை : சச்சின் டெண்டுல்கர் (1997-98)**

**விளக்கம் :**

1. இவருக்கு அடுத்து 2007-ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திரசிங் டோனி இவ்விருது பெற்றார்.
2. மூன்றாவதாக இவ்விருதைப் பெறும் விராட்கோலி 71 டெஸ்ட்களில் 6147 ரன்களையும், 211 ஒருநாள் ஆட்டங்களில் 9,771 ரன்களையும் எடுத்துள்ளார். கடந்த 2013-ல் அர்ஜுனா விருதையும், 2017-ல் பத்மஸ்ரீ விருதையும் பெற்றிருந்தார்.
3. ஏற்கனவே 2016-17-ல் கேல்ரத்னா விருதுக்கு பரிந்துரைக்கபட்ட போதிலும் விருது பெறவில்லை.

20. ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் விருதைப்பெற்ற கால்பந்து வீரர் யார்?

**விடை : லுகா மொட்ரிக்**

**விளக்கம் :**

1. குரோஷிய அணி ரஷ்யா உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் இரண்டாவது இடம் பெற காரணமாக இருந்தவர் லுகா மொட்ரிக் ஆவார். இவர் உலகக்கோப்பபையிலும் சிறந்த வீரருக்கான தங்கப்பந்து விருதைப்பெற்றிருந்தார்.
2. சிறந்த பயிற்சியாளருக்கான விருது பிரான்ஸ் அணியின் டிடியர் டெஸ்சாம்பஸ்க்கு கிடைத்தது. வீரராகவும், பயிற்சியாளராகவும் உலகக்கோப்பையை வென்ற மூன்றாவது நபர் இவர்.

We Shine Academy TM

21. ஐ.நா.வின் "Champions of the Earth" என்ற விருதைப் பெற்ற இந்தியர் யார்?

**விடை : பிரதமர் நரேந்திர மோடி**

**விளக்கம் :**

1. **"Champions of the Earth"** விருது என்பது ஐ.நா.வின் மிக உயரிய சுற்றுச்சூழலுக்கான கௌரவ விருது ஆகும்.
2. இந்த விருது உலகளவில் மொத்தம் 6 பேருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
3. சர்வதேச சூரிய கூட்டணிக்கு (**International Solar Alliance)** தலைமை வகித்தது, வரும் 2022 ஆம் ஆண்டுக்குள் பிளாஸ்டிக்கை இந்தியாவில் ஒழிப்பதற்கான சிறந்த செயல்பாடுகள், கொச்சின் விமான நிலையத்தில் நிலையான ஆற்றலை பயன்படுத்தக் கோரி அதற்கு **Entrepreneurial vision** விருதை பெறச் செய்தல் போன்றவற்றிற்காக மேலும் 5 விருதுகள் ஐ.நா.ஆல் மோடிக்கு அளிக்கப்பட்டுள்ளது.

22. சிறந்த விமான நிலையம் என்ற தேசிய சுற்றுலா விருதைப் பெற்ற விமான நிலையங்கள் எவை?

**விடை : தேவி அகில்யா பாய் ஹோல்கர் விமான நிலையம் (இந்தூர்) மற்றும் சர்தார் வல்லப்பாய் படேல் சர்வதேச விமான நிலையம் (அகமதாபாத்)**

**விளக்கம் :**

1. இவை இரண்டும் 2016-17 ஆம் ஆண்டிற்கான சிறந்த விமான நிலையங்களுக்கான விருதை உலக சுற்றுலா தினத்தன்று (செப்டம்பர் 27) பெற்றன.
2. இதில் சர்தார் வல்லப்பாய் படேல் சர்வதேச விமான நிலையம் "**Rest of India"** பிரிவிலும் சிறந்த விமான நிலையங்களாக தேர்வு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.
3. இந்த விருதை மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் **(Minister of state Independent Charge) ஸ்ரீ K.J. அல்போன்ஸ்** வழங்கினார்.

We Shine Academy TM

# நியமனங்கள்

1. சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமைப் பதிவாளராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை: நீதிபதி சி.குமரப்பன்**

**விளக்கம்:**

1. சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமைப் பதிவாளராக பதவி வகித்து வந்தவர் நீதிபதி ஆர்.சக்திவேல். இவரை கோவை மாவட்ட முதன்மை நீதிபதியாக நியமித்து உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி வி.கே.தஹில் ராமாணீ உத்தரவிட்டார்
2. இதனால் சென்னை உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளராக நீதிபதி சி.குமரப்பன் நியமிக்கப்பட்டார்

2. உச்ச நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட உள்ளவர் யார்?

**விடை: நீதிபதி ரஞ்சன் கோகோய (46-வது உச்ச நீதிமன்ற நீதிபதி)**

**விளக்கம்:**

1. தற்போதைய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியான தீபக் மிஸ்ராவின் பதவிக்காலம் நிறைவடைவதை ஒட்டி, அடுத்த தலைமை நீதிபதி பதவிக்கு ரஞ்சன் கோகோய் அவர்களின் பெயரை தீபக் மிஸ்ரா பரிந்துரை செய்துள்ளார்
2. இதன்படி, வரும் அக்டோபர் 3 அன்று ரஞ்சன் கோகோய் பதவி ஏற்ப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பதவிப் பிரமானம் நிகழ்ந்ததால், நவம்பர் 17, 2019 வரை ரஞ்சன் கோகோய் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகிப்பார்

We Shine Academy

3. HAL ( Hindustan Aeronautics Limited) –ன் புதிய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை: R. மாதவன்**

**விளக்கம்:**

1. இதற்கு முன் அப்பதவியில் இருந்தவர் T.சுவர்ண ராஜீ

4. Ministry of Steel, Government of India – ன் புதிய செயலளராக நியமிகக்ப்பட்டவர் யார்?

**விடை: பினோய் குமார் (Binoy Kumar)**

**விளக்கம்:**

1) இவர் மே 21, 2018 அன்று இந்தத் துறையின் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

5. பாகிஸ்தான் புதிய அதிபராக தேர்வு செய்யப்பட்டவர் யார்?

**விடை: அரி.ஃ.ப் அல்வி (13 –வது பாகிஸ்தான் அதிபர்)**

**விளக்கம்:**

1. பாகிஸ்தான் 13-வது அதிபரை தேர்ந்தேடுப்பதற்கான வாக்குப்பதிவு செப்டம்பர் 4-ல் நடைபெற்றது. இதில் தெஹ்ரீக்-இ-இன்சா.ஃ.ப் கட்சியை சேர்ந்த ஆரி.ப் அல்வி நாடாளுமன்றத்தில் பதிவான 430 வாக்குகளில் 212 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்

6. BSNL –ன் புதிய விளம்பர தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: மேரிகோம்**

**விளக்கம்:**

1. ஐந்து முறை உலககுத்துச்சண்டை சாம்பியனான மேரிகோம் BSNL - ன் புதிய விளம்பர தூதராக 2 வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். தொலைக்காட்சி விளம்பரங்களிலும், அச்சு ஊடகங்களிலும் இவரின் மூலம் விளம்பரம் செய்யப்படும் என BSNL நிறுவனம் அறிவித்துள்ளது

We Shine Academy TM

7. உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்காசிய மண்டல இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

**விடை: பூனம் கேத்ரா பால்சிங்**

**விளக்கம்:**

1. 2019 பிப்ரவரியில் இருந்து தொடங்கும் அவரது பதவிக்காலம் அதற்க்கடுத்து வரும் 5 ஆண்டுகள் வரை நீடிக்கும். புதுடெல்லியில் நடந்த உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்காசிய மண்டலத்தின் 71-வது கூட்டத்தில் நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இவரே இப்பதவி வகிக்கும் முதல் பெண் இயக்குநர் ஆவார்
2. முதன் முறையாக மண்டல இயக்குநராக இருந்த காலத்தில் மண்டலத்தில் உள்ள 4 நாடுகளில் தட்டம்மை ஒழிக்கப்பட்டது, மற்றும் 6 நாடுகளில் ரூபெல்லா கட்டுப்படுத்தப்பட்டது

8. SBI –ன் நிர்வாக இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: அன்சுலா காண்ட்**

**விளக்கம்:**

1. இதற்கு முன் இவர் SBI -ன் துணை நிர்வாக இயக்குனராக பணியாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது
2. இவருடன் சேர்த்து SBI –க்கு 4 நிர்வாக இயக்குனர்கள் உள்ளனர்.
3. மற்றவர்கள் - P.K.குப்தா, DK காரா & அரிஜித் பாசு

9. துரோணாச்சாரியா, தயான்சந்த் விருதுகளுக்குரியவாகள் தேர்வு செய்வதற்காக யார் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது?

**விடை: முன்னாள் நீதிபதி முகுல் முத்கல்**

**விளக்கம்:**

1. இக்குழு 11 உறுப்பினர்களை உள்ளடக்கியது
2. ஆசிய போட்டிகள் நடைபெற்றதால் நிகழாண்டு விருது வழங்கும் விழா வரும் செப்டம்பர் 25 அன்று நடைபெற உள்ளது

We Shine Academy TM

10. பாகிஸ்தான் முதல் பெண் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவியேற்றுள்ளவர் யார்?

**விடை: தாஹிரா ச.ஃ.ப்தார்**

**விளக்கம்:**

1. பாகிஸ்தான் நாட்டின் பலுசிஸ்தான் உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாக தாஹிரா ச.ப்தார் பதவியேற்றுக் கொண்டார்
2. அவர் இந்தப்பதவியில் 2019 அக்டோபர் 4-வரை நீடிப்பார். பாகிஸ்தான் உயர்நீதிமன்றத்திற்கு பெண் ஒருவர் தலைமை நீதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல் முறை

11. இந்திய வங்கிகள் சங்கத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: சுனில் மேத்தா**

**விளக்கம்:**

1. பஞ்சாப் தேசிய வங்கியின் மேலாண்மை இயக்குநரும் தலைமை செயல் அதிகாரியான சுனில் மேத்தா 2018-19 ஆம் ஆண்டுக்கான இந்திய வங்கிகள் சங்கத்தின் (Indian Banks Association – IBA) புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்
2. IBA என்பது இந்திய வங்கியியல் நிர்வாகத்தின் ஒரு பிரதிநிதி அமைப்பாகும். இதன் தலைமையகம் மும்பையில் உள்ளது

12. மக்களவை நெறிமுறைகள் குழு தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: எல்.கே.அத்வாணி**

**விளக்கம்:**

1. மக்களவையில் நெறிமுறைகளுக்கு எதிராக எம்பிக்கள் நடந்துக்கொண்டால் தானாக விசாரிக்கும் அதிகாரம் நெறிதுறைகுழுவுக்கு உள்ளது

We Shine Academy TM

2. நெறிமுறை தவறி நடந்துகொண்ட எம்.பிக்கள் மீது புகார் வந்தால் அதை விசாரித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் அந்த குழுவுக்கு உண்டு
3. மக்களவை நெறிமுறைகள் குழுவின் தலைவராக எல்.கே.அத்வானியை மக்களவை தலைவர் சுமித்ரா மகாஜன் நியமித்துள்ளார்
4. அவை அமர்வுகளில் எம்பிக்கள் கலந்துக்கொள்ளாதது தொடர்பான விவகாரத்தை விசாரிக்கும் குழு தலைவராக பி.கருணாகரன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோல் அரசு உறுதிமொழி தலைவராக ரமேஷ் பொக்ரியல் நிஷாங்க் நியமிக்கப்பட்டுள்ளார், மற்றும் கீழ்நிலை சட்டக்குழுவின் தலைவராக தீலிப்குமார் மன்கலால் நியமிக்கப்பட்டுள்ளார்

13. லால் பகதூர் சாஸ்திரி நினைவு அறக்கட்டளையின் முதல் கௌரவத் தூதர் யார்?

**விடை: அக்சய் குமார்**

**விளக்கம்:**

1. இது இந்தியாவின் இரண்டாவது பிரதமரான லால் பகதூர் சாஸ்திரியின் குடும்பத்தால் நிறுவப்பட்ட ஒரு சமூக அமைப்பாகும்

14. NIC (National Insurance Company Limited) –ன் புதிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை: தஜிந்தர் முகர்ஜி (Tajinder Mukherjee)**

**விளக்கம்:**

1. இவர் செப்டம்பர் 14 முதலே இப்பதவியை வகிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது

15. சூடான் நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: மவுடா மவுசா அப்துல்லா**

We Shine Academy

**விளக்கம்:**

1. இவர் 21 அமைச்சருடன் அந்நாட்டின் தலைநகரத்தில் பதவியேற்றுக் கொண்டார்

16. Skill India Campaign (திறன் இந்தியா பிரச்சாரம்) –ன் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளவர்கள் யார்?

**விடை: அனுஷ்கா சர்மா, வருண் தவான்**

**விளக்கம்:**

1. திட்டத்தை மக்களிடம் ஊக்குவிக்கவும் அத்திட்டத்தைப் பற்றி மக்களிடம் எடுத்துரைக்கவும் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்த திட்டம் 2015 ஜூலை 15-ல் பிரதமரால் தொடங்கப்பட்டது. 2022-ஆம் ஆண்டுக்குள் 40 கோடி பேருக்கு பலவகையான திறன்களை கற்பிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்

17. SAIL ( Steal Authority of India Limited) நிறுவனத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளாவர் யார்?

**விடை: அனில் குமார் சௌத்ரி**

**விளக்கம்:**

1. இவருக்கு முன் பதவியிலிருந்த பி.கே.சிங் கடந்த ஜூன் 30-ஆம் ஓய்வு பெற்றதை அடுத்து அந்தப் பதவிக்கு தற்போது அனில் குமார் சௌத்ரி நியமிக்கப்பட்டுள்ளார்
2. இவர் 2020 டிசம்பர் மாதம் வரை இப்பதவியை வகிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது
3. இதற்கு முன், அனில் குமார் சௌத்ரி SAIL நிறுவனத்தின் நிதித் துறை இயக்குநராக பதவி வகித்து வந்தார்

18. ராஷ்ட்ரிய இஸ்பத் நிகம் விமிடெட் (RINL – Rashtriya Ispat Nigam Limited) நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை: P.K. ராத்**



We Shine Academy™

**விளக்கம்:**

1. இவருக்கு முன் அப்பதவியில் இருந்தவர் P.மதுசூதன்
2. ராத், இதற்கு முன் -ன் செயல்பாட்டு பிரிவின் தலைவராக பதவி வகித்தது குறிப்பிடத்தக்கது.

19. நேபாள நாட்டின் சுற்றுலா பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: ஜெயா பிராடா**

**விளக்கம்:**

1. இந்திய பாராளுமன்றத்தில் உறுப்பினரும் நடிகையுமான ஜெயா பிராடா நேபாள நாட்டின் சுற்றுலாத்துறைக்கான நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்

20. குவாட்டலா குடியரசின் (Republic of Guatemala) அடுத்த இந்திய தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை: B.S.முபாரக்**

**விளக்கம்:**

1. இவர் தற்போது வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கூட்டு செயலாளராக பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது

21. இந்திய விமானப் படையின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை: அனில் கோஷ்லா**

**விளக்கம்:**

1. இவருக்கு முன் இப்பதவிலிருந்த R.நம்பியார், சில்லாங்கிலுள்ள கிழக்கு விமானப்படையின் தலைமை **தளபதியாக (Commander-in-chief of Eastern Air Command)** பதவியேற்றதை அடுத்து **அனில் கோஷ்லா** நியமிக்கப்பட்டார்)

22. இந்தியப் பழங்குடியினருக்கான (Tribes India) நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: மேரி கோம்**

**விளக்கம்:**

1. இவர் உலக குத்துச்சண்டையின் நடப்பு சாம்பியன் ஆவார்
2. இவரை Tribes India –க் கான நல்லெண்ண தூூதராக மத்திய பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சர், ஸ்ரீ ஜீவல் ஓரம் (Shri Jual Oram) நியமித்தார்
3. மேலும் பஞ்ச தந்திரா (Punch Tantra) என்னும் நூலையும் வெளியிட்டார்

23. எல்லைக் காவல்படையின் (BSF - Border Security Force) பொது இயக்குனராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை: ரஜினி காந்த் மிஸ்ரா**

**விளக்கம்:**

1. இதெபோல், **SSB (Sashastra Seema Bal)** –ன் பொது இயக்குனராக
2. S.S.தேஷ்வால் (S.S.Deswal) நியமிக்கப்பட்டுள்ளார்

24. சீனாவிற்கான அடுத்த தூதராக பதவியேற்க உள்ளவர் யார்?

**விடை: விக்ரம் மிஸ்ரி**

**விளக்கம்:**

1. இவர் தற்போது மியானடமர் நாட்டிற்கான இந்தியாவின் தூதராக உள்ளார்
2. சீனாவின் தூதராக உள்ள கௌதம் பம்பவேலே இந்த ஆண்டு ஓய்வுபெற உள்ளதால் விக்ரம் மிஸ்ரி இப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார்

25. அமெரிக்கா-இந்தியா பாதுகாப்பு கூட்டண்மை அமைப்பு வாரியத்தில் (USISPF) சேர்ந்துள்ள இந்தியர் யார்?

**விடை: ஜெய்சங்கர்**

**விளக்கம்:**

1. தற்போது TATA குழுமத்தில் நிறுவன விவகாரங்கள் பிரிவு தலைவராக இவர் உள்ளார்
2. USISPF என்பது அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான ஓர் உத்திசார் உறவை வளர்க்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். USISPF தலைமையகம் வாஷிடனில் அமைந்துள்ளது

26. என்.எல்.சி இந்தியா நிறுவனத்தின் புதிய பதவியேற்றுக்கொணடடவர் யார்?

**விடை: ராக்கேஷ் குமார்**

1. **விளக்கம்:** கடலூர் மாவட்டம் நெய்வேலியில் உள்ள என்எல்சி இந்தியா நிறுவனத்தின் 36-வது தலைவராக ராக்கேஷ் குமார் செப்டம்பர் 28ல் பதவியேற்றுக்கொண்டார்ஷ
2. இவர் கடந்த 2012.ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தில் நீதித்துறை இயக்குனராக பொறுப்பேற்றார்.

# அறிவியல் மற்றும் தொழிற்நுட்பம்

1. சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு எந்த நாடு முதன்முறையாக இரண்டு வீரர்களை அனுப்புவதாக அண்மையில் அறிவித்துள்ளது?

**விடை : ஐக்கிய அரபு அமீரகம்**

**விளக்கம் :**

1. இந்நாட்டின் சார்பில் ஹஸ்ஸா அல்-மசூரி மற்றும் சுல்தான் அல் நேயாதி என்ற இரண்டு வீரர்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட உள்ளனர்.
2. கடந்த ஆண்டு ஐக்கிய அரபு அமீரகத்தை சேர்ந்த 4 பேர் அடுத்த ஐந்து ஆண்டுகளில் சர்வதேச விண்வெளி மையத்திற்கு அனுப்பப்படுவர் என்று அந்நாட்டின் பிரதமர் அறிவித்திருந்தார்.

We Shine Academy TM

3. செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக "ஹோப்" என்ற பெயரிலான திட்டம் 2021-ஆம் ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும் என்று ஐக்கிய அரபு அமீரகம் ஏற்கனவே அறிவித்துள்ளது.
4. தலைநகரம் : அபுதாபி
5. பிரதமர் : ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்மூம்
6. அதிபர் : கலீ∴பா பின் ஸைத் அல் நஹியான்
7. நாணயம் : திர்ஹம்

2. விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்திற்காக இந்தியா எந்த நாட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது?

**விடை : பிரான்ஸ்**

**விளக்கம் :**

1. ககன்யான் திட்டத்தின் கீழ் 2022-ஆம் ஆண்டுக்குள் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
2. இத்திட்டத்தின் படி விண்வெளிக்கு 3 பேரை அனுப்பி வைப்பதற்கு திட்டமிட்டுள்ளது. ரஷ்யா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளுக்கு அடுத்தப்படியாக 4-வது இடத்தில் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பிய நாடுகளின் பட்டியலில் இந்தியா இணையும்.
3. இந்த ஒப்பந்தப்படி பிரான்ஸில் விண்வெளி வீரருக்கான மருத்துவமனையை இஸ்ரோ அமைத்து இருநாட்டு மருத்துவர்களும் இணைந்து செயல்பட வழிவகை செய்யப்படும்.
4. தலைநகரம் : பாரிஸ்
5. நாணயம் : யூரோ
6. பிரதமர் : எட்வர்டு பிலிப்
7. அதிபர் : இம்மானுவேல் மேக்ரோன்

We Shine Academy TM

3. காபி உற்பத்தியாளர்களுக்காக மத்திய அரசு எந்த தொழில்நுட்ப முயற்சிகளை தொடங்கியுள்ளது?

**விடை :Coffee Connect**

**விளக்கம் :**

1. காபி துறையில் உற்பத்தி மற்றும் தரத்தை உயர்த்தி விவசாயிகளுக்கு உதவும் வகையிலான **Coffee Connect India Coffee Field Force** மற்றும் காபி கிரிஷி தரங்கா என்ற இருசெயலிகளை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் சுரேஷ் பிரபு அறிமுகப்படுத்தி வைத்தார்.
2. **Coffee Connect** என்ற செயலியானது காபி உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளவும், சுற்றுச்சூழல் குறித்து அறிந்து கொள்ளவும், மேலும் காபி விவசாயம் தொடர்பான பல்வேறு விவரங்களை அறிந்துக் கொள்ளவும் உதவும்.
3. காபி கிரிஷி தரங்கா செயலியில் உற்பத்தி திறன், லாபகத்தன்மை, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, மழை, பூச்சிகள், நோய்கள் உள்ளிட்ட உற்பத்தி மற்றும் வேளாண்தொடர்பான பிரச்சனைகளுக்கான தீர்வும் இதில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. கூகுள் அறிமுகப்படுத்தியுள்ள புதிய தேடல் வலைத்தளம் எது?

**விடை :Dataset Search**

**விளக்கம் :**

1. விஞ்ஞானிகள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் பிறர் தங்கள் பணிக்காகத் தேவைப்படும் தகவல்களைக் கண்டறிய உதவும்.

5. எந்த வகையான விமானத்துக்கு நடுவானில் எரிபொருள் நிரப்பி இந்தியா சாதனை படைத்துள்ளது?

**விடை : தேஜஸ் போர் விமானம்**

We Shine Academy TM

**விளக்கம் :**

1. இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட தேஜஸ் போர் விமானம் காற்றில் பறந்துக் கொண்டிருக்கும் போது எரிபொருள் நிரப்பும் முயற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளது.
2. இதன் மூலம் ராணுவ விமானங்களுக்கு நடுவானில் எரிபொருள் நிரப்புதல் அமைப்பு கொண்ட எலைட் நாடுகளின் பட்டியலில் இந்தியா நுழைந்துள்ளது.
3. இந்திய போர் விமானம் ஒன்றுக்கு வானில் எரிபொருள் நிரப்பப்பட்டது, இதுவே முதல் முறையாகும்.

6. நிலவுக்கு சுற்றுலா பயணிகளை அழைத்துச் செல்லும் புதிய திட்டத்தை தொடங்கியுள்ள அமெரிக்காவை சேர்ந்த தனியார் நிறுவனம் எது?

**விடை : ஸ்பேஸ்-எக்ஸ்**

**விளக்கம் :**

1. விண்வெளியில் பயணிக்கும் சராசரி மனிதர்களில் கனவை நனவாக்கும் வகையில் அவர்களை அழைத்துச்செல்ல சக்திவாய்ந்த “பிக்.·.பால்கன்” ராக்கெட் பயன்படுத்தப்படும் என அமெரிக்காவின் தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனமான ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.
2. ஏற்கனவே அடுத்த ஆண்டு இறுதியில் உலகிலேயே முதல் முறையாக இருசுற்றுலா பயணிகளை நிலவுக்கு அனுப்புவதாக அந்நிறுவனம் அறிவித்திருந்தது.

7. புவி கண்காணிப்புக்காக இஸ்ரோவால் அண்மையில் அனுப்பப்பட்ட இரண்டு செயற்கை கோள்கள் எவை?

**விடை : நோவா எஸ்.ஏ.ஆர், எஸ் 1-4**

**விளக்கம் :**

1. 445 கிலோ எடைக் கொண்ட நோவா எஸ்.ஏ.ஆர் என்ற செயற்கைக்கோள் இயற்கை பேரிடர், வெள்ளப்பாதிப்பு மற்றும் பனிப்படலம் ஆகியவற்றை கண்காணிக்கும்.

8. MPATGM - ன் இரண்டாவது விமானப் பரிசோதனை எந்த இடத்தில் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது?

**விடை : அஹ்மத்நகர் (Ahmednagar)**

**விளக்கம் :**

1. **MPATGM - Man Portable Anti-Tank Guided Missile**
2. 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில், MPATGM –ன் அதிகப்பட்ச வரம்பு திறன் உள்ளிட்ட பல்வேறு எல்லைகளுக்கு வெற்றிகரமாக சோதனைச் செய்யப்பட்டது.

9. பிரிட்டன் நாட்டுக்குச் சொந்தமான இரண்டு புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்களை தாங்கிச் சென்ற இந்திய ஏவுகணை எது?

**விடை :PSLV – C42**

**விளக்கம் :**

1. NovaSAR மற்றும் S1 - 4 என்ற இரண்டு புவி கண்காணிப்பு செயற்கைகோள்களையும், **பிரிட்டனின் SSTC (Surrey Satellite Technology Limited)**உருவாக்கியது.
2. ISRO - ன் 5 மாத கால இடைவெளிக்குப் பின் ஆண்டின் முதல் முழு வணிகப் பயணமாக PSLV – C42வை அனுப்பியது.

10. தேர்தல் நடத்தை விதிமீறல்களை கண்காணிக்க எந்த செல்லிடப்பேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஓம் பிரகாஷ் ராவத் தெரிவித்துள்ளார்?

**விடை : சி-விஜில்**

**விளக்கம் :**

We Shine Academy TM

1. மத்தியபிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட நான்கு மாநில சட்டபேரவை தேர்தல்களில் விதிகள் மீறப்படுவதை கண்காணிக்க இந்த சிறப்பு செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.
2. இதன்படி வாக்காளர்கள் அந்த செயலியை செல்லிடப்பேசிகளில் பதிவிறக்கம் செய்து கொண்டு தங்களது பகுதிகளில் அரங்கேறும் முறைகேடுகளை புகைப்படம் அல்லது வீடியோவாக பதிவு செய்து தேர்தல் ஆணையத்திற்கு புகாராக அனுப்ப முடியும். அதன்பேரில் அடுத்த 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும்.
3. இத்திட்டமானது எதிர்வரும் 2019 மக்களவை தேர்தலுக்கான முன்னோட்ட முயற்சி என்று இந்திய தலைமை தேர்தல் ஆணையா ஓம் பிரகாஷ் ராவத் தெரிவித்துள்ளார்.

11. குற்றத் தடய வலையமைப்பு முறை என்ற மத்திய தரவுத்தளம் எப்போது உருவாக்கப்பட்டது?

**விடை : 2009**

**விளக்கம் :**

1. 2008-ஆம் ஆண்டின் மும்பை பயங்கரவாத தாக்குதல் நிகழ்வை அடுத்து அப்போதைய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தின் யோசனையின் பேரில் இந்த தரவுதள அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

12. முக அங்கீகார தொழில்நுட்பம் மூலம் “Boarding Pass” வழங்கும் ஆசியாவிலேயே முதலாவது விமான நிலையம் என்ற பெருமையை பெறவுள்ள இந்திய விமான நிலையம் எது?

**விடை : கெம்பகௌடா சர்வதேச விமான நிலையம்**

**விளக்கம் :**

1. முக அங்கீகார தொழில்நுட்பம் மூலம் **“Boarding Pass”** வழங்கும் ஆசியாவிலேயே முதலாவது விமான நிலையம் என்ற பெருமையை பெங்களூருவில் உள்ள கெம்பகௌடா சர்வதேச விமான நிலையம் பெறவுள்ளது.

We Shine Academy

2. இதற்கென பெங்களூரு சர்வதேச விமான நிலையம் லிமிடெட் மற்றும் போர்த்துகீசிய மென்பொருள் நிறுவனமான ‘விஷன் பாக்ஸ்’ இடையே ஒப்பந்தம் செய்யப்பட்டது.

13. முழுவதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட எந்த ஏவுகணையை அண்மையில் பரிசோதனை செய்யப்பட்டது?

**விடை : பிரஹார்**

**விளக்கம் :**

1. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு **(Defence Research and Development Organisation – DRDO) -** ஆல் உள்நாட்டிலேயே உருவாக்கிய குறைந்த தொலைவில் தரையில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கவல்ல தரையிலிருந்து ஏவப்படும் ஏவுகணையை ஒடிசா மாநிலம் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்திலிருந்து செப்டம்பர் 20-ல் சோதிக்கப்பட்டது.
2. இந்த ஏவுகணை திட எரிபொருளில் இயங்கும் வகையிலும் விரைந்து செயல்பட்டு இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும் வகையில் அனைத்து விதமான காலநிலைகளையும் தாங்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

14. சூரியனைச் சுற்றி வரும் நுண்கோள்கள் ஒன்றில் ஆய்வு மேற்கொள்ள ஜப்பான் அனுப்பிய இரண்டு ஆய்வுக் கலங்களின் பெயர் என்ன?

**விடை : ஹாயாபுஸா – 2**

**விளக்கம் :**

1. நுண்கொள்களின் மிகக் குறைந்த ஈர்ப்பு விசையையும், அதன் வளி மண்டலத்தையும் பயன்படுத்தி **“ஹாயாபுஸா - 2”** என்ற அந்த ஆய்வுக்கலங்கள் தரையிரங்கும் எனவும், புவி மண்டலம் குறித்து புதிய உண்மைகளைக் கண்டறிவதற்கான பல ஆய்வுகளை மேற்கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

We Shine Academy ™

2. ஜப்பான் விண்வெளி ஆய்வு மையத்தின் இந்தத் திட்டம் வெற்றியடைந்தால், நுண்கோளில் இறங்கி சோதனை செய்த முதல் கண்காணிப்பு ஆய்வுக் கலங்கள் என்ற பெருமையை “ஹாயாபுஸா – 2” பெறும்.

15. இந்தியாவின் முதல் நீர்மூழ்கி ஆளில்லா விமானம் எது?

**விடை :EyeROV TUNA**

**விளக்கம் :**

1. கப்பல்கள் மற்றும் பிற நீர்மூழ்கி பொருட்களின் பழுது மற்றும் பராமரிப்பின் போது இந்த நீர்மூழ்கி ஆளில்லா விமானம் பயன்படுத்தப்படும்.
2. NPOL - ஆல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக இது பயன்படுத்தப்படும்.

16. “Jan Dhan Darshak” என்ற செல்லிடப்பேசி செயலியை வெளியிட்டுள்ள அமைச்சகம் எது?

**விடை : நிதி அமைச்சகம்**

**விளக்கம் :**

1. இந்த செயலி, வங்கிக்கிளை,ATM, அஞ்சலகம் போன்றவை எந்த இடத்தில் உள்ளது என்பதை சாதாரண மனிதனும் எளிதில் அறிய வழி செய்கிறது.

17. காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்த உருவாக்கப்பட்ட புதிய சாதனத்தின் பெயர் என்ன?

**விடை :WAYU (Wind Augmentation Purifying Unit)**

**விளக்கம் :**

1. இதனை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் டாக்டர். ஹர்ச வர்தன், புதுடெல்லியில் துவங்கி வைத்தார்.
2. இதனை Council of Science and Industrial Research என்ற அமைப்பு உருவாக்கி உள்ளது.
3. இக்கருவி விஷ வாயுக்கள், கார்பன் மோனாக்சைடு போன்றவற்றை நீக்க வல்லது.

# விளையாட்டு நிகழ்வுகள்

1. ஆசியப் போட்டி ஆடவர் குத்துச் சண்டையில் 75 கிலோ எடைப்பிரிவில் வெண்கலம் வென்ற இந்திய வீரர் யார்?

**விடை : விகாஸ் கிருஷ்ணன்**

**விளக்கம் :**

1. கடந்த 2010 -இல் தங்கம், 2014-இல் வெண்கலம்,அ2018-இல் வெண்கலம் என தொடர்ந்து குத்துச் சண்டையில் 3 பதக்கங்களை விகாஸ் வென்றுள்ளார்.
2. இதேப்போல், நட்சத்திர வீரரான அமித் பங்கால் குத்துச்சண்டை 49 கிலோ எடைப்பிரிவில் இறுதிக்கு தகுதி பெற்று குறைந்தது வெள்ளிப் பதக்கத்தை உறுதி செய்துள்ளார்.

2. ஆசியப் போட்டி ஆடவர் ஸ்குவாஷ் பிரிவில் இந்திய அணி வென்ற பதக்கம் என்ன?

**விடை : வெண்கலம்**

**விளக்கம் :**

1. இதேப்போல், ஸ்குவாஷ் போட்டியில் இந்திய மகளிர் அணி இறுதிச் சுற்றுக்கு முன்னேறி உள்ளது.

We Shine Academy TM

3. ஆசியப் போட்டியின் விளையாட்டுகளில் ஒன்றான பாய்மரப்படகு பந்தயத்தில் இந்தியா எத்தனை பதக்கங்களை வென்றுள்ளது?

**விடை : 3**

**விளக்கம் :**

1. 49 எப்எக்ஸ் மகளிர் போட்டியில், வர்ஷா கௌதம் ஸ்வேதா ஷெர்வேகர் இணை வெள்ளிப் பதக்கத்தை வென்றது.
2. மகளிர் ஓபன் லேசர் 4.7 பிரிவு போட்டியில், ஹர்ஷிதா டோமர் வெண்கலம் வென்றார்.
3. மேலும், ஆடவர் 49 பிரிவு பந்தயத்தில் வருண் தக்கர் அசோக் - செங்கப்பா கணபதி இணை வெண்கலப் பதக்கம் வென்றனர்.

4. ஆசியப் போட்டி மகளிர் ஹாக்கி போட்டியில் தங்கம் வென்ற நாடு எது?

**விடை : ஜப்பான்**

**விளக்கம் :**

1. இதன் மூலம் ஜப்பான் அணி 2020 ஒலிம்பிக் போட்டிக்கு நேரடியாகத் தகுதி பெற்றது.
2. இதில் இந்தியா வெள்ளிப் பதக்கம் வென்றது.

5. ஆசிய விளையாட்டு போட்டியில் பிரிட்ஜ் என்று அறியப்படும் சீட்டாட்டத்தின் ஆடவர் இரட்டையர் பிரிவில் தங்க பதக்கம் வென்ற இந்தியர்கள் யார்?

**விடை: பிராணப் பரதன் , சிவநாத் சர்கார்**

**விளக்கம் :**

1. இதில் பிரணாப் பரதன் நடப்பு 18வது ஆசிய விளையாட்டு போடடியில் பங்கேற்றுள்ள இந்திய குழுவில் தங்கம் வென்ற மிக வயதான வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.
2. இப்போட்டியில் சீனா வெள்ளிப்பதக்கமும், இந்தோனேஷியா வெண்கலப்பதக்கம் வென்றது.

6. ஆசிய விளையாட்டு போட்டியில் ஆடவர் ஹாக்கியில் வெண்கலப்பதக்கம் வென்ற நாடு எது?

**விடை: இந்தியா**

**விளக்கம்:**

1. பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் 2-1 என்ற கோல் கணக்கில் இந்தியா வெற்றி பெற்று வெண்கலப்பதக்கம் வென்றது.

**7.** ஆசிய விளையாட்டு போட்டியின் ஸ்குவாஷ் விளையாட்டில் இந்திய மகளிர் அணி பெற்ற பதக்கம் எது?

**விடை: வெள்ளி**

**விளக்கம்:**

1. சுனேனா குருவில்லே, ஜோஷ்னா சின்னப்பா, தீபிகா பலிக்கல், தன்வி கன்னா ஆகியோர் அடங்கி இந்திய அணி தனது இறுதி சுற்றில் ஹங்காங்கிடம் 0-2 என்ற கணக்கில் தோல்வியடைந்து வெள்ளிப்பதக்கம் வென்றது.
2. ஆசிய விளையாட்டு போட்டியின் ஸ்வாஷ் பிரிவில் இந்திய மகளிர் அணி வெள்ளி பதக்கம் வெல்வது இது இரண்டாவது முறையாகும்.
3. முன்னதாக கடந்த 2014-ஆம் ஆண்டு இன்சியானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டியில் இந்திய மகளிர் அணி இதேபோன்று வெள்ளி வென்றிருந்தது.

8. தென் கொரியாவில் நடைபெறும் 52 ஆவது ஐஎஸ்எஸ்எ.ஃ.ப் உலக துப்பாக்கி சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் ஜுனியர் பிரிவில் இந்தியா எத்தனை தங்கப் பதக்கங்களை வென்றது?

**விடை : 2**

**விளக்கம்:**

1. ஜுனியர் ஆடவர் தனிநபர் 50மீ பிஸ்டல் பிரிவில் அர்ஜீன் சிங் சீமா தங்கமும், கௌரவ் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

2. இதேப்போல், அர்ஜுன், கௌரவ் ராணா, அன்மோல் ஜெயின் ஆகியோர் அடங்கிய இந்தியக் குழு, அணிகள் பிரிவில் 1659 புள்ளிகளுடன் தங்கம் வென்றது.
3. 2020 ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு தேர்வு செய்யப்படுவதற்கான முதல் தகுதிப்போட்டி இதுவாகும்.
4. இப்போட்டியின் மூலமாக 60 வீரர், வீராங்கனைகள் தகுதி பெறலாம்.

9. ஆசியப் போட்டிகள் 2018 பதக்கப் பட்டியலில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**விடை: 8**

**விளக்கம்:**

1. 15 தங்கம், 24 வெள்ளி, 30 வெண்கலம் உட்பட மொத்தம் 289 பதக்கங்களுடன் இந்தியா 8-வது இடத்தில் உள்ளது. பதக்கப் பட்டியலில் இந்தியா இந்த இடத்தைப் பெறுவது இது தொடர்ந்து 3-வது முறையாகும்.
2. இதில் சீனா 132 தங்கம், 92 வெள்ளி, 65 வெண்கலம் உட்பட மொத்தம் பதக்கங்கள் பெற்று முதலிடத்திலும், ஜப்பான் 75 தங்கம், 56 வெள்ளி, 74 வெண்கலத்துடன் மொத்தம் 205 பதக்கங்களுடன் 2-வது இடத்திலும் உள்ளது.
3. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இதுவே இந்தியாவின் அதிகபட்ச பதக்க எண்ணிக்கையாகும். இப்போட்டியில், இந்தியா 24 வெள்ளிப பதக்கங்களை வெல்வது இதுவே முதல் முறையாகும்.

10. ஆசிய விளையாட்டுப் போட்டியின் குத்துச்சண்டை விளையாட்டில், ஆடவருக்கான 49 கிலோ பிரிவில் இந்தியாவில் யார் தங்கப் பதக்கம் வென்றார்?

**விடை : அமித் பங்கால்**

We Shine Academy TM

**விளக்கம்:**

1. இதன்மூலம், ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற 8 ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
2. நடப்பு ஒலிம்பிக் சாம்பியனும், உஸ்பெகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவருமான ஹசன்பாய் தஸ்மடோவை 3-2 என்ற கணக்கில் வீழ்த்தி அமித் பங்கால் தங்கம் வென்றார்.

11. ஆசியப் போட்டிகள் 2018-ன் நிறைவு விழாவில் இந்தியக் கொடியை ஏந்திச் சென்றவர் யார்?

**விடை : ராணி ராம்பால் (மகளிர் ஹாக்கி அணி கேப்படன்)**

**விளக்கம்:**

1. இந்த அறிவிப்பை இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் நரிந்தர் பத்ரா வெளியிட்டுள்ளார்.
2. ராணி ராம்பால் தலைமையிலான மகளிர் ஹாக்கி அணி வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.
3. முன்னதாக, ஆசிய விளையாட்டுப் போட்டியின் தொடக்க நிகழ்ச்சியில் தேசிய கொடியேந்தி இந்திய அணியை வழிநடத்திய ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா தங்கம் வென்றதும் குறிப்பிடத்தக்கது.

12. துப்பாக்கி சுடுதல் உலக சாம்பியன்ஷிப் போட்டி எங்கு நடைபெற்று வருகிறது?

**விடை: தென்கொரியா**

**விளக்கம்:**

1. இப்போட்டியில் 10மீ ஏர்ரைபிள் பிரிவில் இந்தியாவைச் சார்ந்த அஞ்சும் முட்கில் இரண்டாம் இடத்தை பிடித்து வெள்ளிப்பதக்கம் பெற்றார். அபூர்வி சந்தேலா நான்காம் இடத்தை பிடித்தார். இதன் மூலம் இவர்கள் 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

We Shine Academy TM

13. இந்தாண்டு ஆசியப்போட்டியில் அதிக பதக்கத்தை பெற்று தந்த விளையாட்டு போட்டி எது?

**விடை: தடகளம்**

**விளக்கம்:**

1. இப்போட்டியில் 7 தங்கம், 10 வெள்ளி, 2 வெண்கலம் என மொத்தம் 19 பதக்கங்களை பெற்றது.
2. இந்தியா கடந்த 2010 ஆசிய விளையாட்டு போட்டியில் மொத்தம் 65 பதக்கம் வென்றிருந்ததே அதிகபட்ச பதக்கமாக இருந்தது. ஆனால் தற்போதைய போட்டியில் 15 தங்கம் 24 வெள்ளி, 30 வெண்கலம் என் மொத்தம் 69 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 8-வது இடத்ததைப் பிடித்தது.
3. தடகளத்தில் 7 தங்கமும், துப்பாக்கி சுடுதல், மல்யுத்தம் ஆகியவற்றில் தலா 2 தங்கமும், பிரிட்ஜ், ரோயிங், டென்னிஸ், குத்துச்சண்டை ஆகியவற்றில் தலா ஒரு பதக்கம் என மொத்தம் 15 தங்கப்பதக்கங்களை பெற்றது.

We Shine Academy™

14. ஆசிய போட்டிகள் 2018-இல் மிகவும் மதிப்புமிக்க வீரர் (MVP –Most Valuable Player) என்ற சிறப்பினைப் பெற்றவர் யார்?

**விடை: ரிகோகோ ஐக்கீ (Rikako Ikee)**

**விளக்கம்:**

1. இவர் ஜப்பானைச் சேர்ந்த நீச்சல் வீராங்கனை ஆவார்.
2. 18 வயதாகும் இவர், ஆசியப்போட்டிகளில் மொத்தம் 6 தங்கப்பதக்கங்களும், 2 வெள்ளிப் பதக்கங்களும் பெற்றார்.

15. உலகக் கோப்பை ஜுனியர் துப்பாக்கி சுடுதல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர் யார்?

**விடை : சௌரவ் சௌத்ரி**

**விளக்கம் :**

1. தென்கொரியாவின் சாங்வோனில் உலகக்கோப்பை ஜுனியர் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இப்போட்டியில் 10மீ ஏர்பிஸ்டல் பிரிவில் சௌரவ் சௌத்ரி 581 புள்ளிகளுடன தங்கப்பதக்கம் வென்றார்.
2. இவர் கடந்த மாதம் நடைபெற்ற ஆசிய போட்டியிலும் தங்கப்பதக்கம் வென்றிருந்தார். அபிஷேக் வர்மா 8-ம் இடம் பிடித்ததால் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்தார்.

16. அமெரிக்கா ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவு டென்னிஸ் போட்டியில் அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்ற வீரர்கள் யார்?

**விடை : ஜோகோவிச், நிஷிகோரி**

**விளக்கம் :**

1. இரண்டுமுறை சாம்பியனான ஜோகோவிச் 6-3, 6-4, 6-4 என்ற நேர் செட்களில் ஆஸ்திரேலியாவின் ஜான் மில்மேனை வீழ்த்தி 11-வது முறையாக அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

17. ஜுனியர் உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர் யார்?

**விடை: ஹிர்டே ஹஸாரிகா**

**விளக்கம் :**

1. தென்கொரியாவின் சங்வோனில் நடைபெற்று வரும் ஐ.எஸ்.எஸ்.எப் உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவை சேர்நத ஹிர்டே ஹஸாரிகா 10மீ ஏர்ரைபிள் டாப் பிரிவில் ஈரான் வீரர் முகமுது அமீரை வீழ்த்தி தங்கம் வென்றார்.
2. மகளிர் 10மீ ஏர்ரைபிள் அணிகள் பிரிவில் இளவேனில், ஷ்ரேயா அகர்வால் மற்றும் கௌஷிக் ஆகியோர் அடங்கிய இந்திய அணி 1880.7 புள்ளிகள் பெற்று புதிய உலக சாதனையுடன் தங்கம் வென்றது.
3. மகளிர் தனிநபர் 10மீ ஏர்ரைபிள் பிரிவில் இளவேனில் வளரிவன் வெள்ளிப்பதக்கமும். ஷ்ரேயா அகர்வால் வெண்கலப்பதக்கமும் வென்றவர்.

We Shine Academy ™

18. 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை உறுதி செய்துள்ள இரண்டு இந்திய துப்பாக்கி சுடுதல் போட்டியாளர்கள் யார்?

**விடை : அஞ்சும் முட்கில் மற்றும் அபூர்வி சந்தேலா**

**விளக்கம் :**

1. தென்கொரியாவில் நடைபெற்று வரும் துப்பாக்கி சுடுதல் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் அஞ்சும் முட்கில் இரண்டாம் இடத்தைப்பிடித்து வெள்ளியைக் கைப்பற்றினார். அபூர்வி சந்தேலா நான்காம் இடம் பிடித்தார்.
2. இதன் மூலம் இவர்கள் இருவரும் 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை உறுதி செய்தனர்

19. ஐஏஏஎ.ஃப் தடகள் கான்டினென்டல் கோப்பை போட்டியில் முதல் பதக்கம் வென்ற இந்தியர் யார்?

**விடை : அர்பிந்தர் சிங்**

**விளக்கம் :**

1. செக்குடியரசு, ஆஸ்டரவா நகரில் கான்டினென்டல் கோப்பை தடகளப் போட்டிகள் நடக்கின்றன.
2. இதில் ஆசியப் போட்டியில் மும்முறை தாண்டுதலில் தங்கம் வென்ற அர்பிந்தர் சிங் 16.59மீ தூரம் தாண்டி வெண்கலப் பதக்கம் வென்றார்.

20. யுஎஸ் ஓபனில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

**விடை : ஜோகோவிச்**

**விளக்கம் :**

1. செர்பிய நாட்டு வீரரான இவர் இறுதிச்சுற்றில் அர்ஜென்டின வீரர் டெல் பொட்ரோவை வீழ்த்தி மூன்றாவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றார். இது இவர் வெல்லும் 14-வது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

We Shine Academy ™

21. டென்னிஸ் தரவரிசை மகளிர் பிரிவில் முதலிடம் பெற்றுள்ள வீராங்கனை யார்?

**விடை : சிமோனா**

**விளக்கம் :**

1. டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி இரண்டாம் இடத்திலும், ஜெர்மனியின் கெர்பர் மூன்றாம் இடத்திலும் உள்ளனர்.
2. முதன் முறையாக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ஜப்பான் வீராங்கனை ஒஸாகா 12 இடங்கள் முன்னேறி 7-வது இடத்தில் உள்ளார்.ஷ

22. பிக் போர் போட்டியில் இடம் பிடித்த டென்னீஸ் வீரர் யார்?

**விடை : ஜோகோவிச்**

**விளக்கம்** :

1. ரபேல் நடால், ரோஜர் பெடரர் ஆகிய இருவரும் யுஎஸ் ஓபன் போட்டியில் தோல்வியுற்ற நிலையில், ஜோகோவிச், டெல் பொட்ரோவை வீழ்த்தி 14-ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார்.
2. இதன் மூலம் ஏற்கனவே 6-ஆவது இடத்தில் இருந்த ஜோகோவிச், தற்போது ஏடிபி தரவரிசையில் 3-வது இடத்தில் உள்ளார். இதனால் பிக் போர் பட்டியலில் ஜோகோவிச் மீண்டும் சேர்ந்துள்ளார்.

23. ஐசிசி ஒருநாள் ஆட்ட பந்துவீச்சாளர்களின் பட்டியலின் தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ள வீரர் யார்?

**விடை : ஜஸ்பிரீத் பும்ரா**

**விளக்கம் :**

1. இவர் இரண்டாமிடத்தில் உள்ள ஆப்கானிஸ்தானின் ரஷீத் கானை விட 20 புள்ளிகள் கூடுதலாக பெற்றுள்ளார்.

24. ஜூனியர் உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற இந்தியர் யார்?

**விடை : விஜயவீர் சித்து**

**விளக்கம் :**

1. தென்கொரியாவின சங்வோன் நகரில் நடைபெறும் இப்போட்டியின் 25 மீட்டர் ஸ்டாண்டர்ட் பிஸ்டல் பிரிவில் 16 வயதான விஜயவீர் சித்து 572 புள்ளிகள் பெற்று தங்கப்பதக்கம் பெற்றார்.
2. மேலும் இதே பிரிவு அணிகளுக்கான போட்டியில் ராஜ்கன்வர் சிங் சாந்து, பிஜயவீர் சித்து, ஆதர்ஷ் சிங் ஆகியோர் அடங்கிய இந்திய அணி மொத்தம் 1695 புள்ளிகள் குவித்து தங்கப்பதக்கம் பெற்றது.

25. எந்த மாரத்தான் பந்தயத்துக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது?

**விடை : டாடா மும்பை மாரத்தான் ஓட்டப்பந்தயம்**

**விளக்கம் :**

1. 2019 ஜனவரியில் நடைபெற உள்ள டாடா மும்பை மாரத்தான் ஓட்டப்பந்தயத்திற்கு சர்டிவேதச தடகள சம்மேளனத்தின் கோல்ட் லேபல் அங்கீகாரம் கிடைத்துள்ளது.
2. இந்தியாவில் இந்த அங்கீகாரம் பெற்ற ஒரே மாரத்தான் இதுவாகும்.

We Shine Academy TM

26. அசாமின் விளையாட்டு தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் இந்திய வீராங்கனை யார்?

**விடை : ஹீமா தாஸ்**

**விளக்கம் :**

1. 2018 ஜகர்த்தா ஆசியப் போட்டிகளிலும், 2018 IAAF உலக U- 20 சாம்பியன்ஷிப் போட்டிகளிலும் சாதனை புரிந்த இந்திய தடகள வீராங்கனை ஹீமா தாஸ், கௌகாத்தியில் நடத்த விழாவில் அசாம் மாநிலத்திலன் விளையாட்டு தூதராக அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டார்.
2. உலக ஜுனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 400மீ ஓட்டத்தில் ஹீமா தாஸ் தங்கப்பதக்கம் பெற்றார்.

# பொருளாதார நிகழ்வுகள்

1. 2018 - 19 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி எத்தனை சதவீத உயர்வைக் கண்டுள்ளது?

**விடை : 8.2%**

**விளக்கம் :**

1. இதற்கு முன்பாக கடந்த 2015 - 16 நிதியாண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான 4-வது காலாண்டில் தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது அதிகபட்ச அளவாக 9.3 சதவீதத்தைத் தொட்டிருந்தது.
2. அதற்குப் பிறகு நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் தான் நாட்டின் பொருளாதாரத்தில் இந்த அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.
3. சீனாவின் முதல் காலாண்டு பொருளாதார வளர்ச்சியானது 6.7 சதவீதமாக உள்ள நிலையில், இந்தியப் பொருளாதாரம் அதை விட கூடுதலாகவே வளர்ச்சியை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

2. இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அண்மையில் எந்த வங்கியின் உரிமத்தை ரத்து செய்தது?

**விடை :Bhilwara Mahila urban Co-operative Bank Ltd**

**விளக்கம் :**

1. இந்த வங்கி இராஜஸ்தானிலுள்ள பில்வாரா என்ற இடத்தில் அமைந்துள்ளது.

3. பொதுத்துறை மற்றும் மத்திய அரசின் பல்வேறு துறைகளும் தங்களுடைய ஆண்டு கொள்முதலில் எத்தனை சதவீத அளவுத்தேவையை சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிடமிருந்து வாங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது?

**விடை : 20%**

**விளக்கம் :**

1. மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11%பங்களிப்பை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.
2. இந்நிலையில், குறு, சிறு தொழில் முனைவோர் தொழில் துவங்குவதற்கு பல அரசுத் துறைகளின் அனுமதி பெறுவதை எளிதாக்கும் வகையில்,http://easybusiness.tn.gov.in/msme/என்ற ஒற்றைச் சாளர வலைதளத்தை தமிழக அரசு துவங்கியுள்ளது.

4. PayU India தனது வங்கி சாரா நிதி நிறுவனத்தை உருவாக்க எந்த அமைப்பிடமிருந்து உரிமம் பெற்றது?

**விடை : இந்திய ரிசர்வ் வங்கி(RBI)**

**விளக்கம் :**

1. நுகர்வோர் கடன் வியாபாரத்தை வளர்ப்பதில் நெ.்.பேர்ஸ் நிறுவன உரிமையாளர்களுக்கு (Naypers – Owned Fintech Major) மிகப்பெரிய ஊக்கத்தை வழங்கும் வகையில் PayU இந்த முடிவை எடுத்துள்ளது. நிறுவன நிர்வாகிகளின் கூற்றுப்படி,PayU அதன் தளத்தில் 4,00,000 வணிகர்களைக் கொண்டுள்ளது.

5. RBI(Reserve Bank of India) எந்த நிறுவனத்தின் Pre-Paid Cards வழங்கும் உரிமையை ரத்து செய்துள்ளது?

**விடை :Tech Mahindra Limited**

**விளக்கம் :**

1. இந்த உரிமத்தை (COA – Certificate of Authorization)நவம்பர் 2013-ல் Tech Mahindra-க்கு வழங்கியது குறிப்பிடத்தக்கது.

6. எந்தெந்த மூன்று வங்கிகள் இணைய உள்ளதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது?

**விடை : பேங் ஆப் பரோடா, விஜயா வங்கி மற்றும் தேனா வங்கி**



We Shine Academy TM

**விளக்கம் :**

1. இந்த மூன்று வங்கிகளும் ஒன்றிணையும் போது இந்தியாவின் 3-வது மிகப்பெரிய கடன் வழங்கும் அமைப்பாக உருப்பெறும்.
2. கடந்த ஆண்டில் SBI தன்னுடன் பாரதிய மகிலா வங்கி உட்பட 5 வங்கிகளை இணைத்ததன் மூலம் இந்தியாவின் மிகப்பெரிய வங்கியாக SBI உருவெடுத்தது குறிப்பிடத்தக்கது.

7. SBI (State Bank Of India) –ன் தலைமை நிதி அதிகாரி (CFO – Chief Financial Officer) ஆக பொறுப்பேற்றுக் கொண்டவர் யார்?

**விடை : பிரசாந்த் குமார்**

**விளக்கம் :**

1. இவருக்கு முன் CFO-ஆக இருந்த அன்சுலா காந்த், தற்போது SBI-ன் மேலாண்மை இயக்குநராக பதவி உயர்வு பெற்றார்.

8. பொருளாதார சுதந்திர பட்டியலில் (Economic Freedom Index) இந்தியா எத்தனையாவது இடத்தைப் பிடித்துள்ளது?

**விடை : 96**

**விளக்கம் :**

1. 162 நாடுகளில், கனடாசை சார்ந்த சிவில் சொசைட்டி மையத்தால் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் இந்தியா 96-வது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த ஆண்டு இந்தியா 98-வது இடத்தைப் பிடித்தது. ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் முதல் மற்றும் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளன.

# முக்கிய தினங்கள்

We Shine Academy ™

1. தேசிய ஆசிரியர்கள் தினம் (National Teacher’s Day) எப்போது கொண்டாடப்பட்டது?

**விடை: செப்டம்பர் 05**

**விளக்கம்:**

1. இந்த தினம் இந்தியாவில் முதல் துணைக்குடியரசு தலைவரும், இரண்டாவது குடியரசுத் தலைவருமான டாக்டர் சர்வப்பள்ளி ராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த தினமான செப்டம்பர் 5-யை ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஆசிரியர் தினமாக கொண்டாடி வருகிறோம்
2. இவர் செப்டம்பர் 5, 1888-ல் தமிழகத்தின் திருத்தணியில் பிறந்தார்
3. 1952 மே 13 முதல் 1962 மே 12 வரை இந்தியாவின் துணைக்குடியரசுத் தலைவராக பதவிவகித்தார்
4. 1962 மே 13 முதல் 1967 மே 13 வரை இந்தியாவின் குடியரசுத் தலைவராக பதவிவகித்தார்

2. சர்வதேச எழுத்தறிவு தினம் (International Literacy Day) எந்த தேதியில் கொண்டாடப்படுகிறது?

**விடை: செப்டம்பர் 8**

**விளக்கம்:**

**1.** இந்த ஆண்டிற்கான நோக்கம் (Theme): எழுத்தறிவு மற்றும் திறன் வளர்ச்சி **(Literacy and Skills Development)**

2. இந்த தினம் யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டு 1967 முதல் ஒவ்வொரு ஆண்டும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது

3. சர்வதேச தொண்டுகள் தினம் (International Day of Charity) எந்த தேதியில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது?

**விடை: செப்டம்பர் 05**

We Shine Academy™

**விளக்கம்:**

1. பொது மக்களிடையே தொண்டு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தொண்டு சார்ந்த நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் செப்டம்பர் 5 சர்வதேச தொண்டு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது
2. 1979-ஆம் ஆண்டில் அமைத்திக்கான நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசாவின் நினைவு தினத்தை குறிக்கும் வகையில் ஐ.நா.பொதுஅவை இந்நாளில் கடைப்பிடித்துவருகிறது

4. ஹிந்தி திவாஸ் (Hindi Divas) எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை: செப்டம்பர் 14**

**விளக்கம்:**

1. 1949-ஆம் ஆண்டு இந்திய அரசியல் நிர்ணய சபை ஹிந்தியை இந்தியாவின் அலுவலக மொழியாக அங்கீகரித்ததன் நினைவாக இந்த தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 14-ல் ஹிந்தி திவாஸ்சாக கொண்டாடப்படுகிறது
2. இந்திய அரசியலமைப்பின் 8-வது அட்டவணையில் 22 அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் இந்தியாவின் அலுவல் துணை மொழியாக ஆங்கிலமும் அறிவிக்கப்பட்டுள்ளது
3. **அரசியலமைப்பின் 351-வது சரத்தில் ஹிந்தி மொழியின்** வளர்ச்சிக்காக மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம் என் குறிப்பிடப்பட்டுள்ளது

5. சர்வதேச ஓசோன் அடுக்கு பாதுகாப்பு நாள் (Preservation of the Ozone Layer) என்று கொண்டாடப்படுகிறது?

**விடை: செப்டம்பர் 16**

**விளக்கம்:**

1. 2018-ஆம் ஆண்டிற்கான நோக்கம்: **“Keep Cool and Carry on: The Montreal Protocol**

6. உலக அமைதி தினம் (International Peace Day) என்று கொண்டாடப்படுகிறது?

**விடை: செப்டம்பர் 21**

**விளக்கம்:**

1. 2018-ஆம் ஆண்டிற்கான கருத்து: **"The Right to Peace – The universal Declaration of Human Rights at 70"**
2. இதே நாள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடத்தின் 70-வது ஆண்டை இந்த வருடம் ஐ.நா. கொண்டாடியது

7. சர்வதேச சைகை மொழிகள் தினம் (International Day of Sign Languages) என்று கடைப்பிடிக்கப்படுகிறது?

**விடை: செப்டம்பர் 23**

**விளக்கம்:**

1. இந்த தினமானது **ISLRTC (Indian Sign Language Research and Training Centre)** என்ற அமைப்பினால் சமுக நீதி மற்றும் அதிகாரமளித்தல் கீழ் செப்டம்பர் 23-ம் தேதி கொண்டாடப்பட்டது
2. இந்த நிகழ்வில் 2019-ஆம் ஆண்டிற்கான சைகை மொழி குறியீடுகளைக் கொண்ட சிறப்பு காலண்டரை ISLRTC வெளியிட்டது

8. உலக கடல் தினம் (World Maritime Day) என்று கொண்டாடப்படுகிறது?

**விடை:** செப்டம்பர் 27

**விளக்கம்:**

1. இந்த தினத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான கருத்து: **"IMO 70: Our Heritage – Better Shipping for a Better Future"**

WeShine Academy™

9. எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டுவரை ஐ.நா. **"Nelson Mandela Decade of Peace"** என அறிவித்துள்ளது?

**விடை: 2019-2028**

**விளக்கம்:**

1. இந்த ஆண்டு நெல்சன் மண்டோலாவின் 100-வது பிறந்த தினத்தை ஒட்டி ஐ.நா.வில் அவரது சிலை திறக்கப்பட்டுள்ளது
2. நெல்சன் மண்டேலா தென் ஆப்பிரிக்காவின் மிகப் பெரிய தலைவர் ஆவார்

10. உலக சுற்றுலா தினம் (World Tourism Day) என்று கொண்டாடப்படுகிறது?

**விடை: செப்டம்பர் 27**

**விளக்கம்:**

1. இந்த தினம் 1980 முதல் ஐ.நா.வின் உலக சுற்றுலா அமைப்பு **UNWTO – United Nations World Tourism Organization)** மூலம் ஆண்டுதோறும் செப்டம்பர் 27 அன்று கொண்டாடப்படுகிறது
2. இந்த ஆண்டிற்கான கருத்து: **"Tourism and the Digital Transformation"**

11. உலக இதய தினம் (World Heart Day) எப்போது கடைபிடிக்கப்படுகிறது?

**விடை: செப்டம்பர் 29**

**விளக்கம்:**

1. இந்த தினம் ஒவ்வொரு ஆண்டும் உலக இதய கூட்டமைப்பால் செப்டம்பர் 29-ல் கடைபிடிக்கப்படுகிறது
2. இந்த ஆண்டிற்கான நோக்கம் **(Theme): Your Heart My Heart**
3. இந்த தினம் இதய நோய் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை கொண்டு செல்லவும், இதயநோயால் ஏற்படும் உயிரிழப்புகளை தவிப்பதற்காகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

# புத்தகங்கள்

We Shine Academy™

1. “மூவிங் ஆன், மூவிங் ஃபார்வர்டு – **ஏ இயர் இன் ஆஃபீஸ்” (Moving on, Moving Forward – A year in office)** என்ற புத்தகம் யாரைப் பற்றியது?

**விடை : குடியரசு துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு**

**விளக்கம் :**

1. மாநிலங்களவை துணைத் தலைவராக வெங்கய்ய நாயுடு பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைந்ததை அடுத்து, இந்தப் புத்தகம் பிரதமர் மோடியால் வெளியிடப்பட்டது.

2. எழுத்து சுதந்திரத்தை மதிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எந்த மலையாள நாவலுக்கு தடைவிதிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது?

**விடை : மீஷா**

**விளக்கம் :**

1. இந்து பெண்கள் கோயிலுக்கு செல்வதை தரகுறைவாக விமர்சிக்கும் வகையில் மலையாள எழுத்தாளர் எஸ்.ஹரீஷ் என்பவர் எழுதியுள்ள இப்புத்தகத்திற்கு தடை விதிக்க முடியாது என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் ஏ.எம்.கான்வில்கர், டி.ஒய்.சந்திரசூட் ஆகியோர் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்தது.

3. Moving On-Moving Forward : A year in office என்ற நூலின் ஆசிரியர் யார்?

**விடை : வெங்கய்யநாயுடு**

**விளக்கம் :**

1. வெங்கய்யநாயுடு குடியரசுத் துணைத்தலைவராக பதவியேற்று ஓராண்டு நிறைவடைந்த நிலையில் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் நூலாக தொகுக்கப்பட்டுள்ளது.

2. புதிய இந்தியா உள்ளிட்ட விவகாரங்களில் வெங்கய்யநாயுடுவின் செயல்பாடுகள் மற்றும் நாட்டின் முக்கிய விவகாரங்களில் அவரின் பங்களிப்பு ஆகியவை இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.
3. 2017 ஆகஸ்டு 11 அன்று வெங்கய்யநாயுடு அவர்கள் இந்திய குடியரசுத் துணைத்தலைவராகவும், மாநிலங்களவை சபாநாயகராகவும் பதவியேற்றுக்கொண்டார்

4. மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகரால் அண்மையில் வெளியிடப்பட்ட மகாத்மா காந்தியடிகள் பற்றிய புத்தகம் எது?

**விடை : நெய் தலிம்**

**விளக்கம் :**

1. இப்புத்தகம் 13 மொழிகளில் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மாநில கவுன்சில் மற்றும் மகாத்மா காந்தி கிராமியக் கல்வி தேசிய கவுன்சிலால் உருவாக்கப்பட்டது.

5. “டிரஸா்ஸ் எபிஸ்டைல்ஸ்” என்ற புத்தகத்தை எழுதியவா் யார்?

**விடை : கே.நட்வர் சிங்**

**விளக்கம் :**

1. இந்த புத்தகத்தில் இந்திராகாந்தி, ராஜாஜி, மவுண்ட்பேட்டன் பிரபு, ஜவஹர்லால் நேருவின் சகோதரிகளான விஜயலட்சுமி பண்டிட், கிருஷ்ண ஹட்சிங், ஆர்.கே. நாராயணன், முல்க்ராஜ் அனந்த் ஆகியோர் பற்றி எழுதியுள்ளார்.
2. இப்புத்தகத்தில் 1975-ஆம் ஆண்டில் நெருக்கடி நிலையை அமுல்படுத்தியதும், பொற்கோவிலில் இருந்த சீக்கிய தீவிரவாதிகளை அப்புறப்படுத்த ப்ளுஸ்டார் நடவடிக்கைக்கு உத்தரவிட்டதும் இந்திரா காந்தி செய்த மிகப்பெரிய தவறுகள் ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார்.
3. கே.நட்வர் சிங் 1966 முதல் 1971-ஆம் ஆண்டு முதல் ராஜீவ்காந்தி, மன்மோகன் சிங் ஆகியோரது அரசுகளிலும் முக்கிய இலாக்காக்களில் பதவி வகித்தார்.

6. “Ready to Fire : How India and I survived the isro spy case” என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

**விடை : நம்பி நாராயணன்**

**விளக்கம் :**

1. இஸ்ரோ ரகசிய தகவல்களை வெளிநாடுகளுக்கு விற்றதாக கடந்த 1994-ல் கேரள காவல்துறையால் கைதுசெய்யப்பட்டார். பின்னர் அந்த வழக்கு விசாரணை சிபிஐ-க்கு மாற்றப்பட்டபோது அவர் மீதான நடவடிக்கை சட்ட விரோதமானது என்று கூறி அவர் விடுவிக்கப்பட்டார்.
2. பொய்யான குற்றச்சாட்டால் மனஉளைச்சல் அடைந்த அவருக்கு இழப்பீடு வழங்க உச்சநீதிமன்றம் சமீபத்தில் உத்தரவிட்டது.

We Shine Academy™